ஞானசம்பந்தம்

மலர் 11]   நந்தன ஞு புரட்டாசி ௴ 10—10—52.   [இதழ் 1

தருமபுர ஆதீனத்துக்குச்

சொந்தமான

(காரைக்கால்)

திருத்தருமபுரம்

ஸ்ரீ யாழ்மூரிநாதர்

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.

மதிப்புரை :

கம்பர் கவிதைக் கோவை.

இக்கோவையின் 2, 3 பாகங்கள் இப்பொழுது வெளிவந்துள்ளன. 2-ம் பாகத்தில் கிட்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம் இரண்டிலுமாக 323 பாடல்கள் தொகுக்கப்பெற்றிருக்கின்றன. 3-ம் பாகத்தில் யுத்தகாண்டத்தில் 404 பாடல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன இரண்டு பாகங்களும் சேர்ந்து விலை ரூ. 5-0-0 பதிப்பாசிரியர்: திரு. அ. சே. சுந்தரராசன் B. A. இராமநாதன் கல்லூரி, சுன்னுகம், இலங்கை.

கல்வியிற் பெரிய கம்பரின் கவிதாரஸத்தைச் சுவைத்துப் பருகிய ஆசிரியர், கல்லூரி மாணவர்களையும் சுவைக்கச் செய்ய வேண்டியே இந்நூலைத் தந்துள்ளார் என்று நூலுக்கு முன்னுரை எழுதிய திரு. சு. நடேச பிள்ளை (B.A., B.L, F.R.E.S.) அவர்கள் குறித்துள்ளார். ஒவ்வொரு படலத்திலும் ஆசிரியர் தாம் பொறுக்கிக்கொண்ட பாடல்கட்கு ஏற்பத் தனித்தனி தலைப்புகள் தந்துள்ளார். அடுத்து அப்பாடல்களில் கூறப்படுகின்ற பிண்டப் பொருளை எளிய இனிய தமிழ் நடையில் எழுதியுள்ளார். இக்குறிப்பு, பாடலின் ரஸத்தை அனுபவிக்கத் தூண்டுகிறது. பிறகு பாடல்கள் மாணவர்கள் படித்தற்கேற்ற முறையில் வேண்டிய அளவு இலக்கணத்திற்கும் இசைக்கும் மாறுபடாத வகையில் பிரித்துப்போடப்பட்டுள்ளது. அரும்பதக் குறிப்பில் அநேக விஷயங்கள் தரப்பட்டுள்ளன. சிற்சில இடங்களில் நயப்பொருளும் உவமை விளக்கமும் குறிக்கப்பட்டுள்ளன. இக்குறிப்புப் பகுதி மிகமுக்கியமான பகுதியாயிருந்து படிப்போர்க்கு ஊக்கமளிக்கிறது. இவ்வாறு எல்லா வகையிலும் சிறந்து விளங்கும் இக்கோவைநூல் மக்கள் பாராட்டுக்குரியதாயிருக்கின்றது. தமிழ் படித்த மக்கள் ஒவ்வொருவர் கையிலும் இந்நூல் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். பொதுவாகச் சொன்னுல் கம்பரது அமுதக் கடலைக் கடைந்து எடுக்கப்பெற்ற அமுதம் இது என்னலாம். வேண்டுவோர் நூலாசிரியரிடம் பெறலாம்.

ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்ம நக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து அவ்வத்தலப் பதிகத்தையும் அச்சிட்டு வழங்கி வருதல்போல, இம்மாதத்திலும் 20—9—52 அன்று திருத்தலைச்செங்காடு ஸ்ரீ சங்கருணாதசுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து தலப்பதிக வெளியீடும் வழங்கப்பெற்றது.

மகாமகோபாத்யாய, டாக்டர்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 11] நந்தன ௵ புரட்டாசி ௴ 10—10—52. [இதழ் 11

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

தஞ்சை ஜில்லா நெற்களஞ்சியம்; சோற்றுப் பஞ்சம் என்றைக்கும் இல்லாத நாடுதான். இங்கே நிலவுரிமையாளர்களும் உழைப்பாளிகளும் நகமும்சதையும்போலஒற்றுமையாக இருந்துவந்தனர். அந்தக்காலத்தில் அமைதிக்கும் ஆனந்தத்திற்கும் பங்கமே இல்லை. மழையும் காலாகாலத்தில் தேவைக்குத்தகப் பெய்துதான் வந்தது. பூமிதேவியும் வேண்டியவரை கொடுத்து அளித்துத்தான் வந்தாள். மக்களிடத்திலே கடமையுணர்ச்சி நிறைந்திருந்தது. ஒப்பரவறியும் குணம், எல்லாவற்றையும்விட மிகுதியாக இருந்தது. அதனால் 'வித்தும் இடல் வேண்டும் கொல்லோ; விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்' என்ற பொய்யாமொழி பொய்யாமொழியாகவே இருந்தது. இன்றைக்கு மக்கள் கடமை உணர்ச்சியிலிருந்து மிக ஆழத்தில் வீழ்ந்துவிட்டார்கள். உடையவனைப் பார்த்து உழைப்பாளியும், உழைப்பாளியைப் பார்த்து உடையவனும்

மிகச் சந்தேகிக்கிறார்கள். எப்படியோ பிறன்கைப்பொருள் தம் பெட்டியில் நிறையவேண்டும்; நீதிவேண்டாம் நியாயம் வேண்டாம் என்ற எண்ணம் மக்களிடையே மலிந்துவிட்டது. மூட்டை நெல் முப்பது ரூபாய்வரை விற்கும் நிலை வந்து விட்டது.

இந்த நிலையில் நமது ஜில்லாவில் உடையவர் உழுவோருடைய ஒற்றுமையை வளர்க்க நமது அரசாங்கம் அவசரச் சட்டத்தையும் பிறப்பித்து ஆன உதவியைச்செய்து வருகிறது, இருந்தாலும் தெய்வகோபம் பொல்லாதது. தவறிய உலகம் அறிந்து அடங்க, நல்லநெறியில் ஒழுக, பூமிசாரத்தையும் மழை வளத்தையும் அவ்வளவாகப் பயன்படச் செய்யவில்லை. குருவை விளைந்தால் குறுணி விற்பது பதக்காவது கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். வானம் பொய்த்தது, வெண் மேகம் சூழ்கின்றது கருமேகத்தைக் கண்ணால்கூடப் பார்க்க முடியவில்லை. இந்த நிலையில் விஞ்ஞானிகள் செயற்கை மேகத்தை உண்டாக்கிச் செய்தவினையைப் போக்கிக்கொள்ள முயற்சிக்கிறார்கள். ஜலதோஷம் பிடித்தவனுக்குப் பித்தந் தணிய மருந்து கொடுத்தால் தீருமா? நாம் நம்மையே ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும். தெய்வசிந்தனை மறவாமல் இருக்கவேண்டும், ஏழை எளியவர்களுக்கு இரங்க வேண்டும். அதனோடு தெய்வீக ஸ்தோத்ரங்களையும் சொல்லி இறைவனைத் தியானிக்கவேண்டும். இவ்வளவும் செய்தால் தான் விராட் சொரூபனாகிய இறைவன் திருவுள்ளம் குளிரும். உள்ளம் குளிர்ந்தால் உலகம் குளிரும்.

இதை எல்லாமக்களும் உணரவே எங்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் கோயில்களிலே கூட்டுப் பிரார்த்தனை நடத்துங்கள்; தெய்வீகப் பாடல்களாகிய மேகராகக் குறிஞ்சிப் பண்களை விதிப்படி ஓதுங்கள்; இறைவனிடம் குற்றங்களைத் தெரிவித்துக் குறையிரந்து வேண்டுங்கள்; மழைபெய்யும்; குருவை விளையும்; குறையெல்லாம் நீங்கும் என்று, உபதேசமொழிகளை உரைத்தார்கள். தமது ஆலயங்களிலும்

திருமடத்திலும் அங்ஙனமே செய்வித்தார்கள். பாராயணம் முடிந்ததும் வான மண்டலத்திலிருந்து மேகக்கூட்டங்கள் கவிந்து கிடக்கின்றன. அம்மட்டோ காவிரியில் கரைபுரண்டு புதுவெள்ளம் வருகிறது; மேட்டூர் அணை கட்டிய காலம் முதல் கண்டிராத நாற்பத்தோரடிவரை இறங்கிய நீர்மட்டம் ஐம்பத்தேழரை அடியாக இன்று உயர்ந்திருக்கிறது. சேலம் கோயம்புத்தூர் ஜில்லாக்களில் மேலும் மழை பெய்வதாகக் கேள்விப்படுகிறோம்.

காந்தியடிகள், ஒருவன் மேற்கொண்ட காரியத்தின் பயன் குறைவானால் அவனது முயற்சியும் செயலாற்றிய வழியும் குறைவென்று சிந்தியுங்கள் என்பார். என்னதான் ஆற்று நீரை நாம் அடைந்தாலும் மேல்நீரும் வேண்டுமல்லவா? சோறு தொண்டையில் விக்கிக்கொண்டவனுக்கு ஒரு வாய் தண்ணீர்தானே உயிர்கொடுக்கிறது அதுபோல் தொண்டைக் கதிராய் இருக்கும் குருவை வெளிவரக் கொஞ்சம் மழையாவது தேவை. அதனை நாம் இன்னும் பெற்றோமில்லை. காந்தியடிகள் சொன்னதுபோல நம்முயற்சியில் ஏதோ குறையிருக்கிறது. மனத்தில் ஏதோ கோணல் இருக்கிறது. இரண்டும்தீர இறைவனைப் போற்றுவோம். மேகராகக் குறிஞ்சியை ஓதி உயருவோம். 'வானங்காள்! பெய்க மழை' என ஆணையிடுவோம். இல்லையானால் அதனைத் தளைப்படுத்திப் பெய்யச் சொல்லவும் நமக்குப் பரம்பரை உரிமை இருக்கிறது. எல்லாவற்றிற்கும் நம்பிக்கை வேண்டும்.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

526

ராஜாஜி புத்திமதி

* * யாராவது ஒரு ஆசிரியரை அல்லது புரபசரை மாணவர்கள் 'பிடித்துக்கொண்டு' அவரை நல்லவர் அன்பு உள்ளவர் என்று நினைக்க முயற்சிக்கவேண்டும். அப்பொழுதுதான் பிந்திய வாழ்க்கையில் இதன்மூலம் ஆத்மீக பலமும் தார்மீக பலமும் நிறைய வருவது தெரியும். இதுபோன்ற விஷயங்களை மனதில் வைத்திருந்தால் நீங்கள் எளிதில் தவறுகள் செய்யமாட்டீர்கள். நான் ஏதாவது செய்தாலோ அல்லது சொன்னாலோ ஸ்ரீ டாடே என் நினைவுக்கு வருவார். நான் செய்ததோ அல்லது சொன்னதோ தன்னை அவமதிப்பதாகும் என்று என்னை அவர் நினைக்கும்படி செய்வார். உங்கள் மனத்தில் ஏதாவது ஒரு உருவத்தை வைத்திருப்பது உங்களுக்கு நல்லது. இந்த உருவத்தைத்தேடுங்கள். வேறு ஒன்றுமில்லையானால் யாராவது ஒரு ஆத்மீக உருவத்தை மனத்தில் வைத்துக்கொள்ளுங்கள். நமது புராதன காவியங்களில் எதையாவது படித்து மனதில் வைத்துக்கொள்ளுங்கள். இராமாயணத்தைப்படித்து ஹனுமாரை உங்கள் மனத்தில் வைத்துக்கொள்ளுங்கள் (சிரிப்பு) இது சிரிக்கும் விஷயமல்ல. நமது புராதன காவியங்களின் சரியான கலாசார வழியில் வளர்க்கப்படவில்லை என்பது இதிலிருந்து தெரியவருகிறது. ஹனுமார் நகைப்புக்கிடமான பெயரல்ல. அவருக்கு ஒரு வால் இருக்கிறது. ஆனால் அந்தவாலை நல்ல ஹிந்துக்கள் முற்றிலும் மறந்துவிடுகிறார்கள். வால் கவியின் அற்புத கற்பனை. ஹனுமான் ஆதர்ச சேவை, பக்தி, விஜயம், சரிவர புரிந்துகொள்ளும் குணம், சரியான நிதானம் ஆகிய நற்குணங்களின் உருவம். இந்த நல்ல அம்சம் ஒவ்வொன்றும் நமக்குத் தேவை. இராமாயணத்தை நீங்கள் சம்ஸ்கிருதத்திலோ தமிழிலோ அல்லது ஆங்கில மொழிபெயர்ப்பிலோ படித்தாலும் ஹனுமானின் உண்மையான உருவம் உங்களுக்குக் கிடைத்துவிடும். ஹனுமாரை நீங்கள் தியானம் செய்யலாம். * * * *

—தினமணி, 9—9—52.

சென்னை முன்னாள் அமைச்சர்,

உயர்திரு, M. பக்தவத்சலம் B.A., B.L. அவர்கள்

சென்னை, 5-வது தமிழ்விழாவில் நிகழ்த்திய வரவேற்புரை.

தமிழ்ப் பெருமக்களே!

தமிழகத்தின் தலை நகரான சென்னையில் நடைபெறும் ஐந்தாவது தமிழ்த் திருவிழாவிற்கு உங்கள் அனைவரையும் மனமுவந்து வரவேற்கின்றேன். இந்தப் பாக்கியத்தை எனக் களித்த வரவேற்புக் கழக அங்கத்தினர்கள் எல்லோருக்கும் என் நன்றி.

தமிழ்நாட்டு விஷயம் ஒவ்வொன்றுக்கும் தனிச் சிறப்பு உண்டு. எனினும் தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்கென விழா கொண்டாடுவதென்பது விசித்திரமாகவே பலருக்குத் தோன்றும். ஏனெனில், எந்த நாட்டிலும் சொந்த மொழிக்கென தனி விழா நடைபெறுவது அபூர்வம். இங்கிலாந்தில் ஆங்கிலத் துக்கும், பிரான்ஸில் பிரஞ்சுக்கும் விழா கொண்டாடும் செய்தியைக் கேட்க முடியாது. அங்கெல்லாம் நாட்டுப்பற்றும் மொழிப் பற்றும் ஒன்றுடொன்று இணைந்து நிற்பது இயற்கை. மக்கள் வாழ்வில் அவை பிரிக்க முடியாமல் கலந்து விளங்குகின்றன. சுருங்கச் சொன்னால், மற்ற நாடுகளில் அந்தந்த நாட்டு மொழியே உயிர்நாடியாகப் பாதுகாக்கப் படுகிறது. அதை அடிப்படையாகக் கொண்டே அந்தந்த நாட்டு மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, ஆன்மீக வாழ்வு மலர்ந்து வருவதைக் காணலாம். இது உலக சரித்திரம் எடுத்துக் காட்டும் நிரந்தர உண்மை; இயற்கை நியதி.

இந்த இயற்கை நியதி தலைகீழாகும் காலங்களும் நாடு களும் இல்லாமல் இல்லை. இச்சம்பவத்திற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். அவற்றுள் சில மிக நியாயமான வையாகவும் தோன்றக்கூடும். ஆனால், அதற்காக இயற்கை

நியதியை மறந்துவிடக்கூடாது. அப்படி மறந்தாலும் இயற்கை பொறுக்காது. இயற்கை நியதிக்குமாறான காரியம் நிகழும் போது அதனை "விபத்து" என்ற பெயரால் குறிப்பிடுகிறோம். அதன் மூலம், அது கொஞ்சகாலமே இருக்கும் என்றும், அதனால் எதிர்பாராத வகையில் பல்வேறு கஷ்டநஷ்டங்கள் நிச்சயம் ஏற்படுகின்றன என்றும், கூடுமான வரையில் 'விபத்து' நேராமல் இருக்க ஜாக்கிரதையோடு இருந்து பழகிக் கொள்ளவேண்டும் என்றும் நாம் அறிகிறோம். விபத்து என்ற சொல்லே இவற்றையெல்லாம் நமக்கு ஞாபகப்படுத்துகிறது.

சரித்திர ஏடுகளைக் கொஞ்சம் புரட்டினால் இடைக்காலத்தில், சில நூற்றாண்டுகளுக்குமுன், தமிழ் நாட்டுக்கு, ஏன், இந்தியா முழுவதுக்குமே அரசியல் துறையில் ஒரு பெரிய விபத்து ஏற்பட்டது விளங்கும். அதன் விளைவாக, அரசியல் உரிமை பறிபோனதை யொட்டி, தமிழ்மொழி முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. அன்னியமொழி அரசாங்க பீடத்தைக் கைப்பற்றியது. தமிழ் மக்கள் அன்னிய மொழியின் மோகத்தில் சிக்குண்டு தாய்மொழியைப் புறக்கணிக்கலாயினர்.

ஆனால், இந்த விபத்து எப்போதும் நிலைத்திருக்க முடியுமா? அதனால் இந்நாட்டு மக்களுக்கு நேர்ந்த தாழ் நிலையைக் கண்டு மனம் நொந்து வாடிய அறிஞர்கள் பலர்; கலைஞர்கள் எத்தனையோ பேர்; தொண்டர்களுக்குக் கணக்கில்லை. இயற்கைக்கு மாறான இந்த இழிவு நிலைமை நீங்க, அவர்கள் அநேக ஆக்க வழிகளில் அரும்பாடு பட்டனர். அவர்கள் முயற்சியின் பயனாகவே, இன்று சுதந்திரத் திருவை அடைந்திருக்கிறோம்.

மறுமலர்ச்சி உதயம் :

சுதந்திரம் கிடைத்ததற்குப் பின், மக்கள் வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் மறுமலர்ச்சி தோன்றுவதற்கான காரியங்கள் நடைபெறத் தொடங்கின. அவற்றில் ஒன்று இந்த விழாவாகும். தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பாடுபடும் லட்சியத்தோடு, ஆண்டுதோறும் இந்த விழா கொண்டாடும் வழக்கம் நம் நாட்டுப் பேரறிஞர்கள் கூட்டு முயற்சியால் தொடங்கப்பட்டது.

தமிழ் மொழி மாரு இளமை வாய்ந்தது. கொள்ளக் குறையாத வளம் செறிந்தது. ஆனால் அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய பொறுப்பு நமக்குண்டு. அதைப்பற்றிக் கவலைப்படாமல் இருந்தால், தமிழ் மொழிக்கு எந்தவித நஷ்டமும் இல்லை. நஷ்டப்படுவோர் தமிழ் மக்களாகிய நாமேயாவோம். மின்சார சக்தி, உலகம் தோன்றிய போதிலிருந்தே இருந்து வந்திருக்கிறது. ஆனால் அந்தச் சக்தியின் பெருமையை அறிந்து மக்கள் நலனுக்குப் பயன்படுத்தினது சில நூற்றாண்டுகளாகத்தான். அவ்வாறு அதை உபயோகிக்க மக்கள் முன் வராவிட்டால், இயற்கையில் உள்ள மின்சார சக்திக்கு ஏதாவது நஷ்டமிருக்க முடியுமா? "மின்சாரத்தை வளர்க்கிறோம்" என்று நாம் சொல்லும்போது, "கொள்ளக் குறையாத அதன் பயனை அடைந்து நாம் வளர்ச்சியடைகிறோம்" என்றே பொருள் கொள்ள வேண்டும். "தமிழ் வளர்ச்சி" என்பதற்கும் இதுமாதிரியாகப் பொருள் கொள்வதே நலம் என்பது என் கருத்து.

இந்தத் தமிழ்விழா ஆண்டுதோறும் படிப்படியே வளர்ந்து வருவதைக் காண்கிறோம். தமிழ் நாட்டின் முக்கிய பிரதேசம் ஒவ்வொன்றிலும் இது நடைபெற்று வருவது மற்றொரு தனிச் சிறப்பாகும். சங்கம் திகழ்ந்த பாண்டிய நாட்டு மதுரையில் தோன்றி, இசைத் துறையில் தனிப்பெருமை பெற்றுள்ள சோழ நாட்டுத் திருவாரூரில் தவழ்ந்து, தொழில் துறையில் சிறந்து விளங்கும் கொங்கு நாட்டுக் கோவையில் தளர் நடை பயின்று, சற்றுக் கடல்கடந்து தமிழ்மணம் வீசும் இலங்கைக் காற்றையும் உண்டு, இந்த ஆண்டு தொண்டை நாட்டுச் சென்னைநகரில் நடைவண்டியோட்ட முன்வந்திருக்கிறது என்று கூறலாம்.

நாட்டுப் படலம்:

நாட்டுப் படலம், நகரப் படலம் பாடும் வழக்கம் பழைய இதிகாச இலக்கியங்களில்மட்டுந்தான் காண்கின்றோம் என்றில்லை. இன்றுங்கூட, இத்தகைய விழாக்களிலும், மற்ற மாநாடுகளிலும் இவற்றை விவரித்துக் கூறுவது சம்பிரதாய

மாகிவிட்டது. பழையன வெறுக்கும் புதுமைச் 'சிற்பி' களும் இதற்கு விலக்கல்ல. தம்மையறியாமலே இந்தச் சம்பிர தாயத்துக்கு அத்தகையவர்களும் அடிபணியும்போது, பழைய சம்பிரதாயங்களில் நம்பிக்கைகொண்ட என்போன்ருர் அதை எப்படி விடமுடியும்?

தொண்டை நாட்டில் காவிரி, தாமிரபரணி போன்ற வற்ருத பெருநதிகள் இல்லை. மலைநாட்டிலிருப்பதுபோன்ற இயற்கைப்பெருவளமில்லை. கொங்குநாட்டின் கைத்தொழில் பெருக்கமில்லை. ஆனல், வாழ்வில் நம்பிக்கைவற்ருத உழைப் பாளர் இங்கு அதிகமுண்டு. துன்பங்களையெல்லாம் இன் முகத்தோடு ஏற்று நடத்தும் நெஞ்சுரம்கொண்ட அறிஞர் களுக்கு இங்கே குறைவில்லை. இயற்கையன்னை இங்குள்ள மக்களுக்கு அநேக வசதிகள் செய்துகொடுத்து அவர்களைச் சுகவாசத்திற்கிரையாக்கி அதன்பயனுன சோம்பல் வாழ்வில் ஆழ்த்தாமல், மிக்க கருணையோடு, இப்பகுதி மக்களுக்குச் சலியாத உழைப்புத்திறனையும், தெளிந்த அறிவுத்திறனையும் வாரி வழங்கியுள்ளது. இயற்கையன்னையின் அன்பை என் னென்று புகழ்வது!

சிற்பத்தின் தனிப்பெருமை :

மாமல்லபுரத்துச் சிற்பம் பொதுவாகத் தமிழ்நாட்டின்- சிறப்பாகத் தொண்டைநாட்டின் கலைத்திறனுக்கே ஓர் அணி கலன். அதனை உலகம் முழுவதும் பாராட்டிவருகின்றது. அதன்மூலம், இந்தியநாட்டின் சிற்பத்துக்கே தனிப்பெருமை கிடைத்துள்ளது. அதைப்போன்றே, காஞ்சியில் உள்ள கைலாசநாதர்கோயில் சிற்பம், வைகுண்டப்பெருமாள்கோயில் சிற்பம் ஆகியவை இந்தியச் சிற்ப வரலாற்றில் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன.

தொண்டைநாட்டு மக்கள், தம் கைத்திறமையைக் கல்லில் மட்டும் காட்டவில்லை. மக்களுக்குப் பயன்படும் பண்டங்களை உருவாக்கும் வகையில் காட்டிவருகின்றனர். காஞ்சீபுரம் நெசவுத்தொழில் தமிழ்நாடெங்கும் பிரசித்திபெற்றது. காஞ்சீ புரம் சென்ருல் காலாட்டிக்கொண்டு சாப்பிடலாம் என்ற

533

பழமொழியும் பிறந்துள்ளது. இதுதவிர, இப்பிரதேசத்தில் பெரும்பாலும் கிணற்றுப்பாசனம் மூலமே உழவு நடைபெறுகிறது.

சென்னையின் சிறப்பு :

கல்லில் கைத்திறம்காட்டிப் புகழ்பெற்ற கலைஞர்களைப் போன்றே, சொல்லில் அறிவுத்திறம் காட்டி அமரத்தன்மை அடைந்துள்ள கலைவாணர்கள் அநேகர் தொண்டைநாட்டில் தோன்றியுள்ளனர். பாட்டின் திறத்தாலே உலகப் பாராட்டுதல் பெற்றுள்ள திருவள்ளுவனார், சென்னை நகரிலேயே தோன்றியவர். ஒப்பற்ற அறிவுக்களஞ்சியமான திருக்குறள் பல்லாண்டுகளுக்குமுன் உருவானது இங்கேதான் என்று அறியும்போது, நமக்கு ஒரு தனிச்செருக்கு எற்படுகின்றதல்லவா?

இப்பொழுது சென்னை நகரமாகத் திகழ்ந்துவரும் பிரதேசம் பல நூற்றுண்டுகளாகவே சரித்திரப் பிரசித்தி பெற்றுள்ளது. புதைபொருள் ஆராய்ச்சியாளரும், வரலாற்று ஆசிரியர்களும் இதைப்பற்றி, பல அரிய செய்திகளைக் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளனர். அவற்றையெல்லாம் விரித்துக் கூற இங்கு நேரமில்லை. ஒரு சில குறிப்புகளை மட்டும் நினைவூட்ட உங்கள் அனுமதியைக் கோருகிறேன்.

சென்னையைச் சுற்றிலும் உள்ள பிரதேசம், பழம் பாலாற்றங்கரை நாகரிகத்தின் நிலைக்களனுக விளங்கியது. சென்னைக்கு அருகே வடபுறத்தில் பேராறு ஒன்று அந்நாளில் ஓடியுள்ளது. குடத்தலையாறு, கூவம் முதலியவற்றைப் 'பழம் பாலாறு' (விருத்த க்ஷீர நதி) என்று கூறுவோர் இன்றும் உள்ளனர். திருமுல்லைவாயில், பாலாற்றங்கரையில் இருந்ததாகச் சுந்தரமூர்த்திநாயனுர் பாடியுள்ளார். அந்தப் பழம் பாலாறு சுற்றுப்புறத்து மலைகளின் நீரையெல்லாம் கொண்டு ஒரு காலத்தில் ஓடியிருக்கவேண்டும். பின்னே அது பல பல காட்டாறுகளாகவும், கல்லாறுகளாகவும், கூவம் அடையாறு முதலிய சிற்ருறுகளாகவும் மாறி மறைந்ததாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

634

பழம் பாலாற்றங்கரையில் வாழ்ந்த கற்கால மக்களிடையே, 'கல்லிடு பதுக்கை' அமைக்கும் வழக்கமும், (அதாவது, இறந்தோரைக் கல்லிட்டுமூடி, அதன்மேல் கல்லை வளையமாக வைப்பது—இது சங்க நூல்களில் கூறப்படுகிறது.) 'முதுமக்கள் தாழிசெய்துவைக்கும் வழக்கமும் (அதாவது மண்ணால் செய்த பெரிய சால்களில் இறந்தோரை அடைத்துப் புதைப்பது) இருந்தன. கூடுவாஞ்சேரி, பெரும்பெயர், ஆதித்த நல்லூர், சத்தியவேடு, பெரியநத்தம் என்று சென்னையைச் சுற்றியுள்ள இடங்களில் இவை கிடைத்துள்ளன. சென்னைக் கண்காட்சி நிலையத்தில் இவற்றை இன்னும் காணலாம். இவற்றின்மூலம் இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன் இங்கு வாழ்ந்த மக்களின் குயவேலைத்திறம் நன்கு விளங்குகிறது.

கற்கால மக்களுக்குப்பின், இரும்பு, செம்பு முதலியவற்றை அறிந்து உபயோகிக்கும் காலம் வந்தது. அக்கால மக்கள் வாழ்க்கையை அறியச் சென்னைக் கீழ்ப்பாக்கத்தில் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வரும் இடுகாடு பெரிதும் துணைபுரிகிறது. இரும்புக்கால மக்களே இங்கிருந்தவர்கள் என்பதை ஆராய்ச்சியாளர் முடிவு செய்துள்ளனர்.

இவ்வாறாக, பழைய சரித்திரகாலம் முதற்கொண்டுமக்கள் நாகரிக வளர்ச்சியின் வரலாற்றை அறிவதற்குச் சென்னைப் பிரதேசம் உதவியாக இருந்துவருகிறது.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளைக் குறிப்பிடும்போது, தொல்காப்பியர் காலத்திலேயே பன்னிரண்டு நாடுகள் கூறப்படுகின்றன. அவற்றுள் அருவா, அருவா வடதலை என்பன திருவேங்கடமலை வரையில் இருந்தன. பழைய நாகரிக ஊற்றாகச் சென்னை (பழம்பாலாற்றங்கரை)யும், புதிய நாகரிக ஊற்றாகப் புதிய பாலாற்றங்கரையும் விளங்கின.

பல்லவர் சேவை :

இந்த அருவர் நாடு அதற்குப்பின் பன்னெடுங்காலம் பெருங்காடாய்க் கிடந்திருக்க வேண்டும். ஆர்க்காடு, ஈக்காடு,

பழவேற்காடு, ஆலங்காடு, திண்டிவனம், செங்காடு, ஊற்றுக் காடு, இளங்காடு முதலியன இந்த அருவா நாட்டில் உள்ள ஊர்களின் பெயர்களாகும். இத்தகைய பிரதேசங்களிலிருந்து காடுகளை வெட்டித் திருத்திய பெருமக்கள் 'காடுவெட்டிகள்' எனப் புகழப்பட்டனர். காட்டில் வாழ்ந்து அவர்கள் செய்த சேவையைப் பாராட்டிக் 'காடவர்' என்றும் அவர்களைத் தமிழர் சிறப்பித்தனர். தொண்டையர்கள் என்ற பல்லவர்கள் இந்தச் சிறப்புப் பெயர்களைத் தங்கள் கல்வெட்டுகளில் செதுக்கி வைத்துப் போயிருக்கின்றனர். இந்தப் பல்லவர்கள் காஞ்சியைத் தலைநகராகவும், மாமல்லபுரத்தை முக்கிய துறைமுகமாகவும் கொண்டு, இப்பிரதேசத்தில் அரசாட்சி புரிந்துள்ளனர். இவர்களுக்கு முன்னால், கரிகால் பெரு வளத்தான் என்ற சோழமன்னன், காடாக இருந்த தொண்டை மண்டலத்தைச் சீர்படுத்தினான் என்பதற்குத் தமிழ்ப்பாட்டுக் களிலும், கல்வெட்டுகளிலும் அநேக சான்றுகள் உள்ளன.

தொண்டைமண்டலத்திற்கு அருவாநாடு என்ற பெயர் வழங்கிவந்த தல்லவா? அப்போது அந்நாட்டார் (அதாவது, அருவர்) பேசிய தமிழுக்கு, அந்நாட்டின் வட பகுதியிலுள்ள வடுகர்கள் 'அரவம்' எனப் பெயரிட்டனர். அதுவே தமிழுக்கு ஆந்திரர் வைத்த பெயராகிவிட்டது.

அருவா நாட்டுத் தமிழ்பற்றி இலக்கண நூல்களிலும் சில குறிப்புகள் உள்ளன. உதாரணமாகக் 'கேணி' என்றால், தமிழ்நாட்டுப் பிற பகுதிகளில் கிணறு என்றே பொருள். ஆனால், அருவா நாட்டார் குளத்தினைக் 'கேணி' என்று வழங்கி வந்துள்ளனர். இதற்கேற்ப, சென்னை பார்த்தசாரதிப் பெருமாள் கோயில் எதிரில் உள்ள குளம் திரு அல்லிக்கேணி (திருவல்லிக்கேணி) என்ற பெயர் பெற்றுள்ளது. இப்போது அதைச் சுற்றியுள்ள பிரதேசமே அப் பெயரால் குறிக்கப் படுகிறது.

திருவல்லிக்கேணி, மயிலாப்பூர்.

திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், திருவொற்றியூர் முதலி யன மிகப் பழங்காலம் முதற்கொண்டு, தமிழ்நாட்டு வரலாற்

றில் இடம்பெற்று, தமிழ்ப் பண்பாட்டோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. திருமங்கையாழ்வார் 'விற்பெரு விழவும்' என்ற பாசுரம் மூலம் திருவல்லிக்கேணி பெருமாளை மங்களா சாசனம் செய்துள்ளார். "குரவமே கமழும் குளிர் பொழிலூடு, குயிலொடு மயில்கள் நின்று ஆல, இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத் திருவல்லிக்கேணி கண்டேனே" என்று அதன் இயற்கை வளனைப் புகழ்கிறார்; அதனை அடுத்துள்ள மயிலாப்பூரை, "தேனமர்சோலை, மாடமாமயிலை" எனக் குறிப்பிடுகிறார்.

அது மட்டுமா? முதலாழ்வார்களுள் ஒருவரான பேயாழ்வார் பிறந்தது மயிலாப்பூரில்தான். சென்னைக் கடற்கரையின் அழகை, பக்திச் சுவையோடு கவிதை நயம்பட அவர் பாடியிருக்கிறார். கடலலைகளில் தவழும் முத்தும் பவளமும் பெருமாளுக்குச் சமுத்திர ராஜன் ஏற்றிவைக்கும் அந்திக்கால மங்கல விளக்காக அவருக்குத் தோன்றுகிறது. "வந்துதித்த வெண் திரைகள் செம்பவள வெண்முத்தம், அந்தி விளக்கும் அணிவிளக்காம்" என்பது அவர் வாக்கு.

சைவக் குரவருள் ஒருவரான திருஞானசம்பந்தர் எலும்பைத் தம் செந்தமிழ்ப் பாடலால் பெண்ணாக்கியதும் மயிலாப்பூரிலேயே. "ஊர்திரை வேலை உலாவும் உயர்மயிலை" என்று அவர் குறிப்பிட்டுள்ளார். பொருட் செல்வத்தையெல்லாம் துறந்து, துறவறச் செல்வரான பட்டினத்தடிகள் தம் இறுதிக் காலத்தில் வாழ்ந்த இடமும் சென்னையைச்சார்ந்த திருவொற்றியூரேயாகும்.

சென்னை நகரின் வாணிகச் சிறப்பைச் சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த சேக்கிழார் பெருமான் மிகவும் பாராட்டி யிருக்கிறார்.

"பல்பெருங்குடி நீடு பரம்பரைச்
செல்வம் மல்கு திருமயிலாபுரி"

என்று இந்நகரத்து வியாபாரிகளின் புகழையும், செல்வ வளனையும் பாடியுள்ளார்.

சமரச சன்மார்க்க நெறியைப் போதித்த அருட்பெருஞ் ஜோதி இராமலிங்க வள்ளலார் வாழ்ந்ததும், 'தரும மிகு சென்னை' என்று வாழ்த்தியதும் இந்த நகரையே யாகும். அவர் உள்ளம் கனிந்து பாடிய கந்தகோட்டம் விளங்குவதும் இந் நகரத்திலேயே. இதைப்போன்று இங்கே வாழ்ந்த பெரியோர்களின் பெயர்களை அடுக்கிக்கொண்டே போகலாம். இதனால்தான், "தொண்டை நாடு சான்றோர் உடைத்து" என்ற புகழ்மொழி பிறந்துள்ளது,

கடல் கடந்தும் சென்றது:

சென்னையின் பெருமை, பழங்காலத்திலேயே கடல் கடந்தும் சென்றுள்ளது. இப்போது மயிலாப்பூர் என வழங்கும் மயிலை, கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே மேனாட்டாருக்குத் தெரிந்திருந்தது. 'டாலமி' என்பவர் அந்த நூற்றாண்டில் வாழ்ந்த யவன பூகோள ஆசிரியர். தாம் எழுதிய உலகப்படத்தில், அவர் மயிலையைக் குறித்துவைத்துள்ளார் என அறிஞர்கள் கருதுகின்றனர். அவர் தம் படத்தில் 'மல்லியர்பா' என்ற பெயரை இப்போது சென்னை இருக்குமிடத்தில் ஒரு துறைமுகத்தின் பெயராக எழுதிவைத்துள்ளார்.

இந்த மயிலாப்பூரின் புகழ் மற்றொரு வகையிலும் மேனாட்டை எட்டியுள்ளது. ஏசுநாதரின் அடியாரான 'செந்தோம்' என்ற தோம் ஐயர் அடிகளார் இந்தியாவுக்கு வந்து, தம் அறிவுரைகளை இந்தச் சென்னை மக்களிடையே வழங்கினதாகக் கூறுகின்றனர். செந்தோம் கோயிலும், பரங்கி மலையைச் சார்ந்த சிறுமலையும், பெருமலையும் இதற்குச் சான்றாக இருப்பதை எடுத்துக்காட்டுகின்றனர். இதன்படி பார்த்தால், கிறிஸ்துபெருமான் பிறந்த முதல் நூற்றாண்டிலேயே, மேனாட்டோடு சென்னைக்குத் தொடர்புண்டாகி இருந்தது எனக் கொள்ளலாம்.

கலங்கரை விளக்கு சென்னையில் ஒளிர்வது இன்றுமட்டுமல்ல. சில நூற்றாண்டுகளுக்கு முன்பு, கீழ்க்கடலில் கப்பல்

ஓட்டிவந்த மேனுட்டார் திசையறியாது திகைத்ததாகவும், அதிருஷ்டவசமாக அப்போது ஒரு பேரொளி தோன்றியதாக வும், அதுதோன்றிய இடத்தில் ஒளியம்மைக்கு ஒரு கோயில் எழுப்பியதாகவும், அதையொட்டி அந்த இடத்திற்கு 'லஸ் சர்ச்' என்ற பெயர் வைத்ததாகவும் கூறுவர்.

ஆன்மீகச் சிறப்பு:

சென்னைப் பிரதேசம், தமிழ்நாட்டு மக்களின் ஆன்மீக வாழ்வுக்கும் அதிகத் துணைபுரிந்துள்ளது. சென்னையைஅடுத்த திருமழிசை என்னும் ஊரில் இளமை முதல் பெயர்பெற்ற நாஸ்திகராய் ஒருவர் வாழ்ந்துவந்தார். அத்தகையவரை பரம ஆஸ்திகராகச்செய்ததோடு, ஆழ்வாராகவும் மாற்றியபெருமை சென்னையில் பிறந்த பேயாழ்வாரைச்சாரும். எனவே, நாத்திக ரையும் நல்வழிப்படுத்தும் நற்குண சீலர்கள் இங்கே எப்போ தும் இருந்தேவருவார்கள்.

அதோடு, மக்களின் துன்பங்களைக்கண்டு கசிந்துருகி அவர்களுக்குத் தொண்டுசெய்வதே ஆண்டவனுக்குச்செய்யும் பெரியகைங்கர்யம் என்றகொள்கையை மக்களிடையேபரப்பி, பெரிய வெற்றியும்கண்ட சீர்திருத்தச் செம்மல் இராமானுசர் பிறந்ததும் சென்னைக்கு அடுத்துள்ள ஸ்ரீபெரும்பூதூர் ஆகும். அதை அடுத்துள்ள குன்றத்தூரிலே, பக்திச் சுவையும் இயற்கை அழகும் மிகச் சொட்டச் சொட்டக் கவிபாடிய சேக்கிழார்பெருமான் பிறந்தார்.

இவ்வாறு இப்பிரதேசத்தைச் சேர்ந்த அறிஞர்களும், அறவோர்களும் தமிழ் மொழிக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் தலைசிறந்த சேவைசெய்துள்ளனர். இவர்கள் பிறந்தது தொண்டைநாடென்றாலும், இவர்கள் சேவைமூலம் தமிழ்நாடு மட்டுமன்றி, இந்தியமக்கள் அனைவருமே பயன்பெற்றுள் ளனர்.

இந்தச் செய்திகளையெல்லாம் இதுபோன்ற சந்தர்ப்பங் களிலாவது நாம் நினைவூட்டிக்கொள்ளவேண்டும். நம் பெரி

யோர்களின் லட்சியங்கள், அவர்கள் நமக்கு வழங்கிச்சென் றுள்ள இலக்கியப் பொக்கிஷங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ள நாம் முயலவேண்டாமா?

தமிழ் விழாவின் நோக்கம்:

எனவே, தமிழ் இலக்கியங்களின் உயர்வு, தமிழ்க் கலை களின் மேன்மை, தமிழ் நாகரிகத்தின் சிறப்பு, தமிழ்ப் பண் பாட்டின் உச்சநிலை ஆகியவற்றை நாம் அறியவும், மற்ற நாட்டு மக்களுக்கு எடுத்துக்கூறவும், இத்தகைய விழாக்கள் பயன்படவேண்டும். தமிழ்விழா கொண்டாடுகிறோம் என்றால் மற்ற மொழிகளை வெறுக்கிறோம் என்றோ, பழிக்கிறோம் என்றோ, தாழ்வுபடுத்துகிறோம் என்றோ பொருளல்ல என் பதை மிகத் தெளிவாகக்கூற விரும்புகிறேன்.

தமிழ்மொழி வளர்ச்சி குறித்து ஒரே வேண்டுகோள். பழங்காலத்தில், கோயில்கள் சமுதாய வாழ்வின் பொது நிலையங்களாக விளங்கிவந்தன. மக்களின் அறிவை வளர்க் கும் சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள் (விவாதசபைகள்), பள்ளிக்கூடங்கள் முதலியன அங்கே நடைபெற்றன. நடனம், இசை ஆகியவை வளர்ச்சிபெறவும் அவையே இடமாய் அமைந்தன. நூற்றுக்கால் மண்டபங்கள், ஆயிரக்கால் மண்டபங்கள் முதலியன இந்த நோக்கத்தோடே கட்டப் பட்டன. இன்றையதினம் இவற்றைத் தக்கவகையில் பயன் படுத்த அறிஞர்கள் திட்டமிட்டு வேலைசெய்யவேண்டும். மக்கள் நல்வாழ்வுபெற்று வாழ்வதற்குக் கோயில்கள் மேலும் சிறந்த தொண்டாற்ற வழிசெய்யவேண்டும். தமிழ் இலக் கியங்களைப் போதிக்கவும், தமிழ்நூல்களைக் குறைந்த விலையில் வெளியிடவும், தமிழறிவைப் பரப்பவும், கோயில் நிர்வாகிகள் பல்வேறு காரியங்களை மேற்கொள்ள முன்வரவேண்டும். நம் நாட்டிலுள்ள ஒரு சில மடங்கள் இத்துறையில் ஓரளவு சேவைசெய்துவருவது மகிழ்ச்சிதரக்கூடிய செய்தியாகும். இத்தொண்டு மேலும் தீவிரமாக நடைபெறவேண்டுமென்று, தமிழ்விழா கொண்டாடும் இந்தச் சந்தர்ப்பத்தில், நான் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழின் முன்னேற்றம்:

தமிழ்மொழி மதங்களையெல்லாம் கடந்துநிற்பது. ஆதி காலம் முதற்கொண்டே, தமிழ் எந்த ஒரு குறிப்பிட்ட மதத்துக்கு மட்டுமே உரிய மொழியாக இல்லை. அது ஆண்டவனைப்போல், எல்லாமாய், அதற்கு அப்பாற்பட்டும் விளங்கி வருகிறது. சைவம், வைணவம் முதலிய இந்தச் சமய இலக்கியங்களோடு சமண, பௌத்த மத நூல்களும் தமிழில் ஏராளமாக உள்ளன. அவற்றிற்குப் பின்புவந்த இஸ்லாம், கிறித்துவம் முதலிய சமயங்கள் குறித்த நூல்களும் தமிழில் இயற்றப்பட்டன. சீறுப் புராணம், தேம்பாவணி போன்ற தீந்தமிழ்க் காவியங்களே இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. ஆதலால், சமயம் என்னும் சிறையில் சிக்கிக்கிடக்காமல், தமிழ்மொழி காலத்தோடு ஒட்டி முன்னேறிவந்துள்ளது.

இந்த முன்னேற்றத்தின் விளைவாகத்தான், இன்று தமிழ் மொழியில், விஞ்ஞானம்குறித்த நூல்கள் பெருகிவருகின்றன. பத்திரிகையாளர்களும், பல்கலைவல்ல அறிஞர்களும் தமிழ் அன்னைக்குப் புதுப் புது அணிகலன்கள் செய்து அழகுபார்க்க முயல்கின்றனர். இந்த முயற்சிக்கு ஊக்கம் அளிக்கவே, ஆண்டுதோறும் ஒரு சில பரிசுகள் கொடுக்க, தமிழ்வளர்ச்சிக் கழகம் முன்வந்துள்ளது. இதுவரையில் யாரும் சேவை செய்யாத புதுத் துறைகளில் அறிஞர்களின் கருத்து செல்ல வேண்டும் என்பதும், அதற்கு ஒருவகையில் தூண்டுகோலாக அமையவேண்டும் என்பதும், இக்கழகத்தாரின்நோக்கமாகும். அத்துடன், தமிழ்க்கலைக் களஞ்சியமும் தயாராகிவருகிறது. அதன் ஒரு பகுதி விரைவில் வெளிவரும்.

தலைமை தாங்கும் பெரியார்:

இவ்விழாவிற்குத் தலைமை தாங்க இசைந்துள்ளவர் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. இம் முதுபெரும் புலவர் இங்கு வீற்றிருப்பதே, இவ் விழாவிற்குத் தனிச் சிறப்பாகும். பல்லாண்டுகளாக தமிழ்மொழிக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் தொண்டாற்றிய ஒழுக்க சீலர் ஒருவரின் தலைமையின்கீழ்,

நம!

இத் திருவிழா நடைபெறுவது நம் அதிர்ஷ்டமாகும். தலைவருக்குப் பணிவான ஒரு சிறு விண்ணப்பம். தாங்கள் சுமார் இருபது ஆண்டுகளுக்குமுன் ஒரு பாட்டியற்றினீர்கள். அதில்,

"தமிழினைப்போல் உயர்ந்தமொழி
தரணியெங்கும் கண்டதில்லை
தமிழரைப்போல் மொழிக்கொலையில்
தலைசிறந்தோர் எவருளரே"

என்று உள்ளம் நொந்து, நெஞ்சம் குமுறி, தமிழ் மக்களின் மனப்போக்கை எடுத்துக்காட்டி இடித்துக் கூறியிருக்கிறீர்கள். உங்கள் சங்கநாதம் தமிழ் மக்களை விழிக்கச் செய்துவிட்டது. அந்த விழிப்பை ஆக்க வழியில் செலுத்தவும், நாட்டின் ஒற்றுமை குலையாமல் இருக்கவும் அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ராஜாஜியின் சேவை:

இந்த விழாவை ஆரம்பித்து வைப்பவர், அரசியல் பெரியார்; வள்ளுவர் முப்பாலையும் வாழ்வில் நடத்திக்காட்டும் பேரறிஞர்; எளிய வாழ்வும், தீர்க்க தரிசனமும், ஆழ்ந்த அனுபவமும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற கர்ம வீரர்; பத்தாண்டுகளுக்கு முன்பே, தமிழ்மொழியை முதன்மொழியாக்கத் திட்டமிட்டு, எத்தனையோ இடையூறுகளிடையே நம் உயர்தரப் பள்ளிகளில் புகுத்திய தீரர்; மிகச் சிக்கலான விஷயங்களையெல்லாம் தமக்கே உரிய எளிய தமிழில் விளக்கிக் கூறும் ஆற்றல் பெற்றவர்; சுருங்கச்சொன்னால் நம்முடைய ராஜாஜி, அவர் ஒன்றை ஆரம்பித்து வைக்கிறார் என்றாலே, அது பூர்த்தியாகிவிட்டது என்று நிச்சயித்துக் கொள்ளலாம். எனவே, இந்த விழாவின் வெற்றியைக் குறித்தும், தமிழ் மொழியின் எதிர்கால வளர்ச்சியைக் குறித்தும், நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?

காட்சி சாலை:

தமிழ்க் கலை சம்பந்தமாகக் காட்சிச்சாலை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கென விசேஷ சிரத்தை எடுத்

5ᛘ2

துக்கொண்ட திரு. நரசிம்மன் அவர்களுக்கும், அதற்கு வேண்டிய அநேக அரிய பொருள்களைக் கொடுத்துதவிய தமிழன்பர்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும் என் நன்றி. இந்தக் காட்சியைத் தமிழன்பர்கள் அனைவரும் கண்டு இன்புறுவார்களென்று நம்புகிறேன்.

இந்த விழாவிற்கு நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அநேக தமிழறிஞர்கள் விஜயம் செய்துள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே வரவேற்பு கூறுகின்றேன். சிறப்பாக, இலங்கையிலிருந்தும் மற்ற வெளியூர்களிலிருந்தும் விசேஷ அழைப்பிற் கிணங்க வந்துள்ளவர்களுக்குத் தனி வரவேற்பு கூறுகிறேன். இவ்விழாவைச் சிறப்பிக்க இங்கே கூடியுள்ள பெருமக்கள் எல்லோருக்கும் மனமுவந்த வரவேற்பு கூறுகிறேன்.

பரஞ்சோதியான பகவானுக்கு அன்று பெரியாழ்வார் பல்லாண்டு பாடினர். இங்கு நாமும் நம் இனிய தமிழுக்குப் பல்லாண்டு கூறி வாழ்த்துவோம்.

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—4—0.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமபுரம், மாயூரம் P. O.

5423.

பொய்யில் காட்சியோர் பொருளுரை

வித்வான், திரு. முத்து, சு. மாணிக்கவாசக முதலியார்
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

சென்ற திங்களது 'ஞானசம்பந்தம்' உயிர்களது வினையைப்பற்றிய கட்டுரை தொடரும் என்று தெரிவித்துளது. அதன்படி இதுவும் வினையாராய்ச்சியைக் குறித்ததாயிற்று.

உயிர்கள் மண்ணுலகில் உடம்பெடுக்கின்றன. எடுத்த உடம்பை ஒழிக்கின்றன. எடுக்கவும் ஒழிக்கவும் உயிர்கட்குச் சுதந்திரம் இருப்பதுபோலத் தோன்ற இவ்வாக்கியங்கள் அமைந்திருக்கின்றன. இருப்பினும், உண்மையில் உயிர்கட்கு அச்சுதந்திரம் இல்லை.

உடம்பை உறுவது பிறப்பாம். உற்ற உடம்பு அறுவது இறப்பாம். இப் பிறப்பும் இறப்பும் உயிர்கட்கு ஏன் உண்டாகின்றன? பழம் பிறப்பிற்செய்த நல்வினை தீவினைகட்கு ஏற்ப அவ்விருவினைப்பயனையும் உண்ணும்பொருட்டு உயிர்கட்குப் பிறவியும் இறவியும் உளவாகின்றன. முதலில் உற்ற பிறவிக்குக் காரணமானவினையே மூலகன்மம் எனப்படும். அம்மூல கன்மம் காரணமாகச் செய்த புதுவினை அடுத்த பிறவிக்குக் காரணமாகும்.

வினையும் வினைப்பயனும் வினைக்கு ஈடாகவரும் உடலும் தாமே உயிர்களை அடையமாட்டாவாகும். அவற்றிற்கு அறிவு ஏது? அறிவுடைய உயிர்கட்கும் அவ்வினைக்கீடாக வரும் உடலை அடையச் சுதந்திரம் ஏது? வினைப்பயனை உண்ணத்தான் சுதந்திரம் ஏது? இருப்பின், வேண்டாதவற்றை விலக்கி வேண்டுவனவற்றை அடையுமன்றோ? இறப்பே இல்லாதொழித்துவிடவும், பிறப்பும் உறாதவாறு தடுத்துவிடவும், நிலம் விண் நாடு என்னும் மூன்றிடத்தும் மாறிமாறி அடையாமல் விரும்பியதோரிடத்தில் நிலைத்து வாழவும் கூடுமன்றோ? அவ்வாறு இல்லாமையால், அவ்வினையும், அவற்றின் பயனும், உடலும் உயிர்கட்கு வந்து

சேரக் காரணம் யாது? உயிர்கட்கு வினையையும் அவ்வினைக்கு ஈடான உடம்பையும், அவ்வுடம்பிலிருந்து உண்ணும் இன்பத் துன்பங்களையும் தருகின்ற ஒன்று வேறாய் உண்டு, அதுதான் கடவுளாவான்.

இன்பமும் துன்பமும் ஒன்றற்கு ஒன்று மாறுபட்டவை யாயிருத்தலால், அவை இயற்கையாகா. இயற்கை மாறு படாது. மாறுபாடுள்ளது செயற்கையேயாகும். நீர் போன்றது உயிர். நீரிற்சேர்ந்த மலர் போன்றது நல்வினை. அம்மலர் மணம்போன்றது நல்வினைப்பயனாகிய இன்பம். நீரிற்சேர்ந்த தீப்போன்றது தீவினை. அத்தீயின் (நீரில் ஏறிய) வெம்மை போன்றது தீவினைப் பயனாகிய துன்பம். நீர்க்கு இயல்பாக இல்லாத மணமும் வெம்மையும் மலரது சேர்க்கையும் நெருப் பினது சார்புமாகிய செயற்கையால் ஆனவை. அவ்வாறே இன்பத்துன்பங்கள் உயிரைச் சார்ந்தவை.

இன்பத்துன்பங்களை நாமேமுயன்று அடைதலும் அகற்ற லும் இயலா. நம்முயற்சியால் துன்பத்தைநீக்கவும் இன்பத்தை ஆக்கவும் இயன்றால் நாம் ஏன் துன்பத்தை அடைகின்றோம்? செல்வத்தை மிகுதியாகத் தேடிச்சேர்த்து, இன்பத்தை நுகர விரும்பி, இடையறாமல் முயற்சிசெய்யும்பொழுது, நடுவில் சோம்பல், தளர்வு முதலிய இடையூறு வருகின்றன. இடையூ றின்றி முயன்றாலும் செல்வமும் சேர்வதில்லை. துன்பமும் தொடராமலில்லை. முயற்சியின்றியும் செல்வம் வருகின்றது. இவற்றை ஆராய்ந்தால், முயற்சியும் காரணமாகாது என்றுண ரலாம். வேறு காரணம் உண்டு, அவையே இன்பத்தையும் துன்பத்தையும் விளைப்பவை.

உயிர்கள் செயலாவன எல்லாம் நன்மையும் தீமையும் ஆகிய இரண்டு பண்புகளுள் ஒன்றைச் சார்ந்தே இருக்கும். இருக்கவே அவற்றை நல்வினை தீவினை என்றனர். அவ்விரு வினையும் பயனைக்கொடுக்கும் பக்குவத்தை அடைந்தபோது அறம் (புண்ணியம்) மறம் (பாவம்) என்று குறிக்கப்படும். அவ்வறப்பயன் மறப்பயன் இரண்டும் இன்பத் துன்பங்களாக

உயிர்க்கு வருகின்றன. இவ்வுண்மையால், இன்பத் துன்பங்கள் இரண்டும் அறம் மறம் என்பவற்ருலும். அவ்வறம் மறம் இரண்டும் நல்வினை தீவினைகளாலும் எய்துவன என்று தெளிவாகும். ஆகவே இன்பத் துன்பங்கட்குக் காரணம் இருவினையே என்று உறுதிப்படும்.

"பேறுபொருள் இன்பம் பிணிமூப்புச் சாக்காடு இவ்
வாறும் கருவில் அமைப்பு"

கருவுற்றுப், பின் உருவுற்றதும் அநுபவத்துக்கு எய்தும்.

"இறந்த பிறப்பில்தாம் செய்த வினையைப்
பிறந்த பிறப்பால் அறிக—பிறந்திருந்து
செய்யும் வினையால் அறிக இனிப்பிறந்து
எய்தும் வினையின் பயன்"

என்று முறையே இறந்தகாலத்திற் செய்ததும் எதிர்காலத்தில் வருவதும் ஆகிய வினையையும் பயனையும் அறியும் வழியும் அறிவிக்கப்பட்டது.

மாயை அநாதி, படைப்புக்காலத்தில் அம்மாயையினின்று நுண்ணுடல் (சூக்குமதேகம்) வந்தது. அதிலிருந்து பருவுடல் (தூலதேகம்) தோன்றிற்று,

ஒரு பிறவியிற் செய்யப்படும் இருவினையும் மறுபிறப்பிற் பயனைத் தருவனவாயும் அப்பயனை நுகருங்காற் செய்யப்படும் இருவினையாயும் விளையும்.

நன்மையும் தீமையும் எண்ணம், பேச்சு, செய்கை மூன்ருலும் உயிர்க்கு உண்டாக்கும் நலத்தை 'ஹிதம்' என்றும், பொலத்தை 'அஹிதம்' என்றும் வடமொழியிற் சொல்வர். ஹிதாஹிதம் (நலம் பொலம்) இரண்டையும் ஏற்றுக்கொண்டு அவற்றிற்கு ஈடாக இன்பத்துன்பங்களைக் கொடுக்கும் ஒன்று தனிப் பொருளாயுளது. அறிந்தோரும் அவர்க்கு அறிவித்த இறைவனாலும் "கடவுள்" என்று குறிக்கவும் ஒரு சிலர் "இயற்கை" என்று களிக்கவும் அத்தனிமுதல் திகழ்கின்றது.

அப்பொருள் ஒன்று இல்லை என்போரைப்பற்றி இங்குக் கவலை வேண்டா.

உயிர்க்கு உறுதியே நலம். உறுதியல்லாததும் உள்ளீடில்லாததும் ஆகியதே பொலம். அந்நலம் பொலங்களைக் கடவுள் ஏற்றுக்கொள்வதன் காரணம் உயிர்கட்கு வீட்டின்பம் எய்தவேண்டி, அவற்றின்பால் வைத்த கருணையேயாகும். அக்கருணையே அநுக்கிரகமாயும் நிக்கிரகமாயும் எய்தும். அஹிதம்செய்த உயிர்களை நல்வழிப்படுத்தற்பொருட்டு நிக்கிரகம் (தண்டனை) செய்தலால், அதுவும் அருளே ஆகும்.

"பார்த்திடின் அருளே எல்லாம்"

"எக்கிரமத்தினுலும் இறைசெயல் அருளே"

(சித்தியார்)

பெற்றோர், தம் மக்களை நல்வழிப்படுத்தற்பொருட்டுச் செய்யுந் தண்டனை இரக்கமன்றிக் கொடுமை ஆமோ?

கொடுக்கப்படும் பொருள்களும், அவற்றை வாங்குவோரும், கொடுப்பவரும், கொடையாகிய நல்வினையும் போகவும் போகாதுநின்று இவற்றின் பயனைத்தரும் ஒரு பொருள், என்றும் நிலைத்திருக்கின்றது. அது விதித்தவையே தானம் முதலிய நல்வினைகளாம். அவற்றுலாம் புண்ணிய பாவங்களை அறிந்து அவற்றின் பயனைத்தருவது அத்தனி முதற்பொருளே.

விதித்த தருமங்களை அறிந்து பாவம் நேராதவாறு காத்துச்செய்தால் அவை அவ்வருளே திருமேனியாக உடைய தனிமுதலின் பணியாக முடியும். உயர்ந்த பயன் எய்தும்.

"ஒழுக்கம் அன்பருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவடக்கம் அறிவொடர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்கள் ஆனல் இரங்குவான் பணியறங்கள்"

என்றருளினர் (113) அருணந்தி தேவநாயனர். சிவனடிக்கு அன்புசெய்கை சிவபுண்ணியச் செயல். அத்திருவடியை மறந்து செய்கின்ற அறங்கள் எல்லாம் புண்ணியமுமாகா

548

வினைசெயல்களே. (117) சிவபக்தியுடன் செய்யும் பாவமும் புண்ணியப் பலனைத்தரும். சிவபத்தியின்றிச் செய்யும் புண்ணியம் பாவப்பயனையே பயக்கும். இவற்றைச் சண்டேசுரர் வரலாறு தக்கன் வரலாறுகளால் அறியலாம்.

வேதாகமங்கள் சிவனுரைத்தவை. அவற்றின்படி நடவாதவுயிர்களை வைக்கும் சிறைகள் நரகுகள். விதிதவருமல் நடக்கும் உயிர்கள் வாழும் உயரிய இடம் தேவருலகுகள்,

இன்பத் துன்பங்கள் மருந்து. அம்மருந்தைக் கொடுக்கும் மருத்துவன் 'வேளூர்' வைத்தியநாதன். அம்மருந்தால் தீரும் பிணிகள் அறம் (புண்ணியம்) மறம் (பாவம்) என்னும் இரண்டுமாகும். மருத்துவநூல் வேதாகமங்கள், அவற்றின் விதிப்படி நடப்பவர் பிணியடையார். நடவாதார் பிணியும் வருத்தமும் அடையாதிரார். வைத்தியன் மருந்து கொடுத்தாவது சாந்தி முதலியவை செய்வித்தாவது பிணியைத் தீர்ப்பான். கடவுள் புண்ணிய பாவங்களாகிய நோய்களை அவற்றின் பயனாகிய இன்பத் துன்பங்களாகிய மருந்தைக் கொடுத்தாவது சாந்தி முதலியவற்றைச் செய்வித்தாவது தீர்ப்பான். சில நோய்களை அறுத்துக் கீறியும் சில நோய்களைச் சர்க்கரையும் பாலும் தேனும் மருந்தொடுகலந்து கொடுத்தும் தீர்ப்பதுபோல இன்பத் துன்பங்களைக் கொடுத்து இருவினையாகிய நோயைப் போக்குவது கடவுள்செயல். இந்த இருவினையையும் போக்கும் வழியைப் பெரியோர் பலவாறு தெளிவுறக்காட்டி யிருக்கின்றனர். அவற்றுள். தருமைக் குருஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளிய **சிவபோகசாரம்** முதலிய ஞானப்பனுவல்களின் திருப்பாடல்கள் எல்லோரும் எளிதில் அறியத்தக்க இனியதொரு சிறந்தமுறையில் அமைந்திருக்கின்றன.

> "முன்னைவினைக் கீடா முதல்வன் அருள்நமைக்கொண்
> டென்னவினை செய்ய இயற்றுமோ—இன்னவினை
> செய்வோம் தவிர்வோம் திரிவோம் இருப்போம் இங்கு
> உய்வோம் எனும்வகைஏ து" (சிவபோகசாரம், 87)

5749

தொனிப்பொருளும் தொல்காப்பியமும்

வித்வான், பிர்மஸ்ரீ K. S. விசுவநாத சாஸ்திரிகள் P O L.,
S V. O. கல்லூரி, திருப்பதி.

தொனிப்பொருளைப் பற்றிய கட்டுரைகளை எழுதத் தொடங்கியதிலிருந்து தமிழ்நூல்கள் எந்த அளவில் இதற்குத் துணைசெய்கின்றன என்று அறிய விழைந்தேன். இம்முயற்சியில் பண்டைத் தமிழ் இலக்கியங்களும் இக்கால இலக்கியங்களுங்கூடத் தொனிக்குரிய சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமைகின்ற உண்மை காணப்பட்டது. பின்பு தமிழ் இலக்கணங்கள் எந்த அளவில் உதவிசெய்கின்றன என்பதையும் அறிய விரும்பினேன். இந்நிலையில் பழந்தமிழ் இலக்கணமாய தொல்காப்பியம் பெரிதும் உபகாரப்படுகின்றமையும் காண நேர்ந்தது. இவ்வகையிற்கண்ட உண்மைகளே இக்கட்டுரை வடிவில் வெளிவருகின்றன. இது தமிழுலகிற்குப் புதியதொரு துறையாக இப்பொழுது கருதப்பெறுதலின் இதனுட் செல்லும்போது குற்றங்குறைகள்நிகழ்வது இயற்கையே. ஆயினும் குற்றங்களைந்து குறைதலைப் பெய்து குணம் ஆக்கிக்கொள்வது அறிவிற்பெரியோரது இயல்பு. இவ்வகையில் அறிஞர்கள் ஊக்குவார்களென்பது சிறியேனுடைய நம்பிக்கை. இந்நம்பிக்கையுடன் இதனை வெளியிடத் தொடங்குகின்றேன்.

இத்தொனிப்பொருளைப்பற்றிப் பேசத்தொடங்குவதற்கு முன் மொழிப் பொருள் இயல்பு முதலில் தெரிந்துகொள்ள வேண்டிய இன்றியமையாமை உடையதாதலின் அதன் இயல்பைச் சிறிது விளக்கிக்கொண்டு மேற்செல்வோம்.

1. மொழியும் மொழிப்பொருளும்

*'இவ்வுலகின் இருளை அகற்றும் பேரொளியாய் விளங்குவது ஞாயிற்றின் ஒளி. அதனினுஞ் சிறந்து விளங்குவது மொழி என்கின்ற நல்லொளி. இவ்வொளி இன்றேல் இவ்

---

* காவியாதர்சம் 1, 4.

 1550

வுலகமே இருளில் ஆழ்ந்துவிடுமாம்.' ஞாயிற்றின் பேரொளியோ புறவிருளை மட்டுமே போக்கவல்லது. மொழி என்ற நல்லொளியோ கதிரொளிபோன்ற பிறவொளிகளால் நீக்கவியலாத அகவிருளையும் அகற்றும் ஆற்றலுள்ளது. மொழி என்னும் நல்லொளியின் வாயிலாகவே நமது அறிவு பெருகுகின்றது என்ற உண்மையை அறிவுடையோர் அனைவரும் அறிவர். காலத்தாலும் இடத்தாலும் எட்டாத நிலையிலுள்ள பொருள்களையுங்கூட நூல்களின் வாயிலாகவும், பத்திரிகை வாயிலாகவும் எட்டுவனவாகச்செய்து நமக்கு உதவிபுரிகிறது. அகவொளியாகிய அறிவொளி நம்மிடையே பெருகுவதும் இதனாலேயே.

இத்தகைய நல்லொளியாகிய இம்மொழி உணர்த்தும் பொருளோ இருவகையினது. வெளிப்படையாகவே மொழியப்படுவது ஒன்று. அது செம்பொருள் அல்லது வெளிப்படைப் பொருள் எனப்படும். இவ்வாறன்றிக் குறிப்பாக உணர்த்தப்பெறுவது மற்றொன்று. அது குறிப்புப்பொருள் எனப்படும். மொழி இவ்விருவகையாலும் பொருளுணர்த்துகின்றமை நோக்கி நன்னூலாரும் "வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே" என்றனர். அழகியதொரு பொருளைக் காட்டி 'இது அழகிது' என்போமானால் அழகிய பொருள் ஒன்று வெளிப்படைப் பொருளாகவே காணப்படுகின்றது. இதற்குமாறாக அழகற்ற ஒன்றனைக் காட்டி 'இது அழகிது' என்பதையுங் கூடக் காண்கின்றோம். அந்நிலையிற் கூறுவோரது கருத்து அழகின்மையைக் குறிப்பதென்பதையும் நாம் அறிவோம். இவ்வாறு குறிப்பாலுணர்த்தப் பெறுவது குறிப்புப்பொருள் எனப் பெறுகின்றது.

இவ்விதம் பொருள் இருவகைப்படுகின்ற நிலையைச் செய்யுள்களிலும் காண்கின்றோம்.

‡ "பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்"

‡ குறள் 599.

எனவரும் இக்குறளின் செம்பொருள் 'யானை பருத்த வடி வுடையதே. அதற்குக் கொம்புங் கூரியதுதான். ஆயினும் என்? புலி தாக்குமானல் யானை அஞ்சுகின்றது' என்று வெளிப்படையாகவே மொழியப்பெற்றிருக்கின்றது. இச் செய்தியே இக் குறட்பாவின் முழுநோக்காக அமைவதில்லை. இச்செய்தி கூறப்பெறுகின்ற இடம் ஊக்கமுடைமை என்ற அதிகாரம். அதற்கேற்ப நோக்கும்போது 'ஊக்கம் ஒவ் வொருவர்க்கும் இன்றியமையாதது. அஃதின்றேல் எத்தகைய கருவிச் சிறப்பும் பயன்படுவதன்று" என்ற பொதுவுண்மை புலனும். இதனையே அவ்வதிகாரம் அமைந்துள்ள அரசிய லோடு இணைத்துக் காணுமிடத்து,

"அரசன் ஊக்கமிலானயின் அரண்
படை முதலாய கருவிச் சிறப்பும் பயன்படுவதன்று"

என்ற சிறப்புண்மையும் பெறப்படுகின்றது. இவற்றுள் யானையின் இயல்பு கூறுவது வெளிப்படைப்பொருள். கருதி யது முடிப்பார்க்கு உரிய பொதுவுண்மையும், அரசர்க்கு உரிய சிறப்புண்மையும் குறிப்பாலுணரப்பெறும் பொருள்கள். இங்ஙனம் மொழிப் பொருள் இருவகையினதாக அமைவத னலேயே தொல்காப்பியரும் பொருண்மை நிலை இருபாற்று என்றனர்.

* "தெரிபுவேறு நிலையிலும் குறிப்பிற் ருேன்றலுமென்
றிருபாற் றென்ப பொருண்மை நிலையே"

என்கின்றது தொல்காப்பியம்.

2. குறிப்புப் பொருளின் இன்றியமையாமை

நாம் கூறக் கருதும் பலவற்றையுமே எல்லாவிடத்திலும் வெளிப்படையாகவே கூற இயல்வதில்லை. சிலவற்றைக் கூற வும் வேண்டும். அது இடத்திற்கும் தரத்திற்கும் ஏற்பப் பொருந்துவதாதலும் வேண்டும். அவ்வாறு சிறந்தமுறையிற்

* தொல். சொல். பெயர். 3.

பொருத்தமுறப் பேசுகின்ற பேச்சுத்தான் சிறப்புடைய பேச்சாக மதிக்கப்படும். அறிவுடையோரிடையே வழங்குதற்குரிய சிறப்புடையதும் அத்தகையதே. காலையில் எழுந்து வெளியே சென்றவன் 'கால் கழுவி வந்தேன்' என்பானுனல் அதன்பொருள் என்னென்று நாம் உணர்வோம். அவன் ஏன் அவ்வாறு கூறுகின்றுன்? அவ்வாறு கூருது நிகழ்ந்தது நிகழ்ந்தவாறே கூறுவானுனல் அது அவையல்கிளவி என்று இழிவாகக் கருதப்படும். ஆதலினுலேயே அது மறைத்து வழங்கப்படவேண்டியதாயிற்று.

‡ "அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்"

என்ற அமைதியும் தோன்றவேண்டுவதாயிற்று. உலகவழக்கிற்கே இந்நிலை என்றுல் நல்லிசைப் புலவர் செய்யுளைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ? செய்யுளோ உலகிற்கு உறுதிபயக்கும் வகையில் உயர்ந்ததொரு செய்தியாகவோ அல்லது தலைசிறந்த உண்மைகளை எடுத்துக்காட்டி இன்புறுத்துவதாகவோ அமைவது. இச் சீரிய நோக்குடன் எழுந்த செய்யுள் எத்துணை நயமுடையதாதல் வேண்டும் என்பது புலவோரது புலமைக்கே புலனுவது.

§ "ஓம்புமதி வாழியோ வாடை பாம்பின்
தூங்குதோல் கடுக்குந் தூவெள் ளருவிக்
கல்லுயர் நண்ணி யதுவே நெல்லி
மறையின மாரு முன்றிற்
புல்வேய் குரம்பை நல்லோ ளூரே"

என வரையாது பிரிந்து வருவான் வாடைக்கு உரைப்பானுய்ப் பாகற்கு உரைத்ததாம் இச்செய்தி. இவ்வாறு கூறுகின்றவன் தலைவன். 'நல்லோள்' என்று தலைவியைப் பாராட்டிக் கொண்டே 'அவளுடைய ஊர், தூய வெள்ளிய அருவியை உடைய மலையின்மேலுள்ளது. வாடையே! நீ அங்கே செல்லாதே' என்கின்றுன் வாடையைநோக்கி. அந்தவாடைதான் இவன்சொற்படியே நடப்பதோ? இன்றேல் இவன் இங்ஙனம்

‡ தொல். சொல். எச்ச. 46. § குறுந் 238.

மொழிவதுதான் எதற்காக? இத்தலைவன் பக்கத்திலிருந்து தேரைச் செலுத்திக்கொண்டிருப்பவன் தேர்ப்பாகன். அவன் தன் கருத்தை அறிதல்வேண்டும். தன் உள்ளம் தலைவியை நாடி விரைந்துசெல்வதுபோல் அத்தேரும் விரைந்து செல்லு தல் வேண்டும். இத்தகைய பயன் கருதி நிகழ்த்தப்பெறுவது இக்கூற்று. அங்ஙனமாயின் 'தலைவி வாடையால் வருந்திக் கொண்டிருப்பாள். அவ்வருத்தத்தை அகற்ற விரைந்து செல்லுதல் வேண்டும். ஆதலால் தேரை விரைந்து செலுத்து வாயாக' என்று வெளிப்படையாகவே ஏன் மொழியக் கூடாது என்றால், ஆம் கூறலாம். ஆயினும் குறிப்பாற் கூறு வதன் நயம் அறிஞர் அறியாததன்று. இங்கே பாகனும் குறிப்பறிந்து பணியாற்றிய பெருமை உடையவனாகின்றான். தலைவனும் கருதியது முடித்து இன்பம் எய்துகின்றான். இது நாகரிகமுறையில் நிகழ்கின்றது. இங்ஙனம் குறிப்பறிந்து ஒழுகுதலின் மேன்மையையே,

[1] "யான்கண்டனையர் என்னிளையரும்"

என்று பிசிராந்தையார் பாராட்டிப் பேசுகின்றனர். இதனால் சொல்லாமலே செய்கின்ற பெரியோரது தரத்திற்குத் தேர்ப் பாகன் உயர்கின்றான். அவனது தகுதியறிந்து நடத்திய சிறப்பும் தலைவனுக்கு உரியதாயிற்று. மற்றும்,

[2] "நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்
கினிய செய்தநங் காதலர்
இன்னா செய்தல் நோமென் னெஞ்சே"

எனவரும் இது வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் வாயில் மறுத்ததாம். தலைவனது புறத்தொழுக்கம் தலைவியை வருத்துகின்றது. அவ்வருத்தத்தை மாற்றித் தலைவனை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறாள் தோழி. அதற்கு உடன் படாது தலைவி மறுக்கின்றமை இதனாற்கூறப்பெறுகின்றதாம்.

---

[1] புறநா. [2] குறுந் 202.

அத்தகைய மறுப்புச்செய்தி இதனுள் வெளிப்படையாகக் காணப்படவில்லை. இதனுள் உவமையாக அமைந்த நெருஞ்சி தலைவனது கொடுமையைக் காட்டுகின்றது. பொன்போன்ற நெருஞ்சி மலர் கண்ணுக்கு இனிமை தருவதேயாயினும் அது விளக்கும் பயனுய நெருஞ்சிமுள் துன்பமே விளைப்பதாகின்றது. அதுபோலவே முன்பு இனியனுக இருந்த தலைவன் இப்பொழுது பரத்தைமை உடையனுகி வருத்துகின்றுன். அக்கொடுமை குறித்தே தலைவியும் வருந்துகின்றுள். அவ் வருத்தத்தையும் வெளிப்படையாகவே 'நோமென் நெஞ்சே' என மும்முறையும் மொழிந்து வெளிப்படுத்துகின்றுள். தலைவியின் இக்கூற்றே அவளது உடன்படாமைக் குறிப்பைத் தோழிக்குப் புலப்படுத்துவதாகின்றது. குறிப்பறிந்து ஒழுகுந் தோழிக்கு 'உடன்படேன்' என்று வெளிப்பட வேறு கூறுதலும் வேண்டுமோ? வெளிப்படக் கூறின் வரும் இழுக்குத் தான் என்?

இத்தகைய இடங்களிலேயே குறிப்பின் சிறப்பு நன்கு விளங்குகின்றது. இத்தலைவனை ஏற்றுக்கொள்வதற்கு இங்கே தடையாய்நிற்பது அவனது பரத்தைமையே. அதுமட்டும் அவனிடமிருந்து நீங்குமானுல் அவ்விருவரது காதலும் அளவின்றிப் பெருகிக்கொண்டிருப்பதே. அதற்குத் தடையாக நிற்கின்ற அப்பரத்தைமை வெறுக்கப்படுகின்றதேயன்றி அத்தலைவன் வெறுக்கப்படுகின்றுனல்லன். இத்தகையதோர் அன்புநிலையில் இவ்வாறு குறிப்பாகமொழிவதே அத்தலைவிக்கு ஏற்பதாம். செறிவு முதலாய நற்பண்பு வாய்ந்த ஒப்பற்ற கற்புடைய ஒரு தலைவியின் தகுதிக்கு 'உடன்படேன்' என்று வெளிப்படையாக மறுப்பதும் தக்கதன்றும்.

இவ்விதம் குறிப்பாகவே மொழியத்தகுவன சில தொல்காப்பியப் பொருளியலுட் கூறப்பெறுகின்றன. வரைதல் வேட்கைப்பொருளாகவருவன அத்தகையன. அறத்தொடு நிற்றல்போல்வனவும் அத்தகையனவே. ஏத்தல் எளித்தல் முதலாய அறத்தொடுநிற்றலின்வகைகளும் குறிப்பாக உணர்த்தற்குரிய இன்றியமையாமை நோக்கி எழுந்தனவே.

3. பொருளியல் குறிப்பின் இன்றியமையாமையை வற்புறுத்துவது

அகனைந்திணையுள் வெளிப்படக்கூறவியலாத — கூறக் கூடாதவற்றைக் குறிப்புவகையாலுணர்த்தவேண்டிய இன்றி யமையாமை குறித்தே பொருளியல் எழுந்தது எனலாம். இவ் வியலுள் வருவனவெல்லாம் வழுவமைதி என்பர் நச்சினார்க் கினியர். 'கூறக் கருதுவது எதையுமே வெளிப்படையாகத் தான் கூறவேண்டும். அங்ஙனமின்றிக் குறிப்புவகையால்' மொழியப்பெறுவன அனைத்தும் வழுவமைதியே என்று கொள்வது சொல்லிலக்கணப்போக்கிற்கு ஏற்பதாம். ஆனால் காவியம் எனத் தகுவதாய செய்யுட்கு உரிய பொருள்நோக்கு அத்தகையதன்று. நல்லிசைப் புலவர்களின் செய்யுள் சிறந்து விளங்குதற்குரிய சிறப்புடைப் பொருள்களையே பொருளிய லும் அதனை அடுத்துவரும் மெய்ப்பாட்டியல் உவம வியல் களுங்கூட வற்புறுத்துகின்றன என்று கூறலாம். பொருளியல் முதற்சூத்திரமே இக்கருத்திற்கு அரண்செய்கின்றது. அது வருமாறு :—

* "இசைதிரிந் திசைப்பினும் இயையுமன் பொருளே
அசைதிரிந் தியலா வென்மனார் புலவர்."

'நிற்கும்சொல், கூறவேண்டும் பொருளை வெளிப்படக் கூறாது வேறொன்றைக் கூறித் திரிந்து நிற்பினும் கூறவேண்டும் பொருளே பொருளாகவந்து இயையும். சொல் திரிந்து நிற்பதற்காகப் பொருளும் திரிந்துவிடாது' என்கின்றதைக் காண்போர்க்கு இவ்வுண்மை புலனாம்.

அன்றியும் குறிப்பாகப் பொருள்உணர்த்தும் சொற்களைப் பகுதிக்கிளவி, பாற்கிளவி, பால்கெழுகிளவி என்று வழங்கு கின்றது தொல்காப்பியம். இப்பொருளியலோ பாற்கிளவி தொடங்கி, அறத்தொடுநிற்றல், வரைதல் வேட்கைப் பொருள வாதியாய பல குறிப்புவகைகளைக் கூறிச்சென்று இறுதியில் முடிவைத்ததுபோல் உள்ளுறை ஐந்தையும் உரைத்துவைத்

* தொல். பொருளியல். 1.

656

திருக்கின்றது. கடைசியில் காட்டலாகாப்பொருள வென்றும் சிலவற்றைக் காட்டி முடிக்கின்றது. தொல்காப்பியத்துப் பொருளதிகாரத்தின் நடுவே நிற்கின்ற இப்பொருளியல், வழுக்களை அமைப்பதற்கே எழுந்தது என்று கருதிவிடுவது அத்துணை சிறப்புடையதாகத்தோன்றவில்லை. வழுவமைதியே காண்பதாகக்கொண்டாலும் ஏதேனும் ஒரு சிறப்பைக்காணுது இவ்வாறு அவ்வியலை நடுநாயகம்போல் இவ்வதிகாரத்தில் அமைத்திரார் தொல்காப்பியர். பொருளதிகாரத்திற்குச் சிறந்ததொரு பொருட்பகுதியே இதனுட் பேசப்படுவதென் பதே பொருத்தமாம். சிறப்புடையதொரு செய்யுள் இலக் கணமே வகுக்குகின்ற தொல்காப்பியம் அச்செட்யுட்கு வேண்டும் சொல்லும் பொருளுங்கூட வகுத்துக்கொள்ள வேண்டிய இன்றியமையாமையினுல் சொல்லின் உறுப்பாய எழுத்தின் இலக்கணம் எழுத்ததிகாரத்தும் பொருளுணர்த் தும் சொல்லின் இலக்கணம் சொல்லதிகாரத்தும் உணர்த்திப் பொருட் பகுதியுள் வெளிப்படையாக மொழியப்படுவன வற்றின் இலக்கணத்தைப் பொருளதிகாரத்து முதல் நான்கு இயல்களிலும் கூறிக் குறிப்பாக உணர்த்தப்பெறுவனவற்றின் இலக்கணத்தை இப்பொருளியலிலிருந்து மூன்று இயல்களால் மொழியத்தொடங்குகின்றது. அதற்கேற்பவே பொருளியல் முதற்சூத்திரம் அமைந்துள்ளது. அங்கிருந்து தொடங்கி உள்ளுறைவரையிற் சென்றிருக்கின்ற போக்கைக் காணும் போது சிறப்புடைய செய்யுட்கு வேண்டும் குறிப்புப்பொருள் களின் சிறப்புக் கருதியே இப்பொருளியலைப் பொருளதிகாரத் தின் நடுவே பொருளியலென்ற பெயருமிட்டுத் தொல்காப் பியனுர் அமைத்துள்ளார் என்று தோன்றுகின்றது. வழு வமைதியே முழுநோக்கானுல் இதற்கு ஒழிபியல் என்றோ எச்சவியலென்றோ ஏதோ ஒரு பெயரை இட்டு வழங்கி இருக் கலாம். அங்ஙனமின்றிப் பொருளியலென்று பெயரமைத்து இருப்பதும் இக் கருத்துக்குத் துணைசெய்கின்றது.

(தொடரும்)

குறிப்பு :— இக்கட்டுரை திருப்பதி S. V. O. கல்லூரி இதழிலிருந்து எடுத்து வெளியிடப்பெற்றது.

57

புறத்துரை.

வித்வான், திரு. வெ. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்
தலைமைத் தமிழாசிரியர், செங்குந்தர் ஹைஸ்கூல், ஈரோடு.

புறத்துரை என்பது புறநானூற்றிலுள்ள மிகவுஞ் சிறப்புள்ள செய்யுட்களின் பழையவுரைகளைத் தொகுத்துச் செய்யப்பெற்றதொரு நூல். இதில் ஐம்பத்தைந்து பாடல்களுக்கு உரையுள்ளது. இது ஏட்டுச் சுவடியில் புறத்திரட்டு என்னும் நூலினை அடுத்துள்ளது. இதனைத் தொகுத்தவர் இன்னாரென்று தெரியவில்லை. அழிந்துவருந் தமிழ்நூல்களில் இதுவும் ஒன்றாகவுள்ளது. இந்நூலுரை டாக்டர் உ. வே. சாமிநாதய்யரவர்களால் அச்சிடப்பெற்றுள்ள புறநானூற்றுப் பழையவுரையே யாகும். புறநானூற்றின் அச்சுச் சுவடியில் இருநூற்றறுபத்தாறுவரையுள்ள செய்யுட்களுக்கு மட்டுமே பழையவுரையுள்ளது. மற்ற செய்யுட்களுக்குப் பழையவுரையில்லை. புறத்துரையென்னும் இந்நூலின் அச்சுச் சுவடியில் பழையவுரை காணப்படாத ஐந்து செய்யுட்களுக்குப் பழையவுரைகள் உள்ளன. அவ்வுரைகள்தாமும் அழிந்தொழியாவண்ணம் ஏட்டுச் சுவடியில் கண்டவாறே ஞானசம்பந்தத்தில் வெளியிடுகின்றேன். இவ்வுரையால் புறநானூறு முழுவதற்கும் பழையவுரை யெழுதப்பட்டு இருந்ததென்பது புலனாகும்.

286 வெள்ளை வெள்யாட்டு......

திணை - தும்பை. **துறை** - வேத்தியல்.

மறுவற்ற தூய வெள்ளாட்டிற் கட்டப்பட்ட வெட்சி மாலை யதனுயிரை விடுத்தற் கேதுவானாற்போலத் தன்னை யொத்தவீரர் தன்னைச் சூழவிருப்பவர்க்கு முன்னாகக்கொடுத்த மதுவினையுடையமண்டை யென்னுடைய புதல்வனைக் காலில்லாத வாசந்தியிற் கிடத்தித் தூயதாகிய வெள்ளைப் புடவையைப் போர்ப்பித்ததில்லை யென்றவாறு. என்ற கருத்துச் சிறைப்பட்டானென்பதாம்.

300 தோறு தோறு......

திணை - தும்பை. **துறை** - தானைமறம்.

558

கடகைத் தா கடகைத் தா என்று சொல்லாநின்றாய்; இவ்வாறு சொல்கின்ற நீ கடகுடனே பொற்றையாகிய கல்லை யரணாகக்கொண்டு மறைந்தாயாயினும் அவனக்கல்லையுமுருவ வெறியுமாதலாற் பிழைப்பைபோலிருந்த தில்லை, நெருநற் பகற்பொழுது நீ யெறிந்து பட்டோனுடைய தம்பி அகலின் கணிடப்பட்ட குன்றிமணிபோலச் சுழலுங் கண்ணினை யுடையனாய்ப் பெரிய வூரின்கண் மனைதொறும் அடப்பட்ட கள்ளிற்கு ஒருமனையின்கண் முகவையாயதனைத் தேடுமாறு போல் அவனின்னைத் தேடாநிற்குமென்றவாறு.

அவனுண்மை கண்டார் வியந்து கூறியவாறு.

301 பல்சான்றீரே......

திணை - தும்பை. **துறை** - தானைமறம்.

பல சான்றவரே! பலசான்றவரே! கன்னிமகளிருடைய கொண்டை பிறராற்றீண்டப்படாதவாறுபோலப் போரிடத்துப் பகைவராற் புகுதற்கரிதாக விடப்பட்ட முள்வேலியை யுடைய கல்லென்ற வாரவாரத்தினையுடைய பாசறையிடத்துப் பலசான்றீரே! முரசொலிக்கும் படையுடைய நும்முடைய அரசனையும் பரிகரிமின். விளங்கிய கோட்டையுடைய நும்முடைய களிற்றையும் பரிகரிமி னென்னுட்டானும் முடைய பூசலன்னுடன்னை யெறியாதாரை யெறிதலெங்கே யுள்ளது. தன்னை யெறிந்தோரை யெதிர்சென்றெறிதலு மாட்டானுதலா லவன்கருதியவிதனை யறிந்தோர் யார்தான்? யாங்கள் பலரென்று கருதியவனை யவமதித்தலைப் பாதுகாமின் அதனைப்பாராய் நிலவெல்லையை யளப்பதுபோலும் நில னளவையுடைத்தாய நில்லாத குறிய செலவையுடைய வளவிய கெதிகளையுடைய குதிரையினது பண்பைக் கொண்டாடி நெருநலை நாளாற் பகற்பொழுது வந்துபோயினான் அவனுரவார முடைத்தாதலா லரசனேறப்பட்ட யானைக்கல்லது தனது விளங்கிய இலைத்தொழிலையுடைய வேலையெடுப்பான் போன்றிருந்திலனென்றவாறு.

தன்னிலங்கிலைவேல் வேந்தர் யானைக்கல்லது ஏந்துவன் போலானுதலானும் மரசுமோம்புமின் நும்களிறும் போற்றுமி னெனக் கூட்டுக.

உதுக்காணென்றது முன்பு பலரையும் விளித்துப் பின் அவருளொருவனை யெதிர்முகமாக்கிக் கூறியவாறு. தன்னுள்ளே வியந்து கூறிய தூஉமாம்.

305 வயலைக்கொடியின்......

திணை - வாகை. **துறை** - பார்ப்பனவாகை.

வயலையினது கொடிபோல வுலர்ந்த விலாப்புடையினையும் வழியால் வருத்தத்தாலோய்ந்த குதிரையினையுமுடைய பழுத்த நிறத்தினையுமுடைய பார்ப்பான் நெருநலின்கண் வந்து தடையின்றிப் புகுந்து சொல்லிய வார்த்தைகள் சில அவ்வளவிற் புறத்தோன் சாத்தப்பட்ட வேணியும் அகத்தோனையு மாற்றி யிருவேந்தருடைய மாட்சிமைப்பட்ட போர்த் தொழிலைச்செய்யும் யானைகளும் போரிற்கணியும் அணிகளை யொழிந்தன வென்றவாறு,

மாற்றி யென்பது மாற்றவெனத் திரிக்கப்பட்டது என்றவாறு.

உயவலூர்தியை யோய்ந்த நடையென்றுஞ் சீப்பைக் கணையமென்று முரைப்பாருமுளர். ஒன்றிரண்டு வார்த்தையாற் சந்து செய்வித்தமை யினிதுநன்றென்று கூறியவாறு.

315 உடையனாயின்......

திணை - வாகை. **துறை** - வல்லாண்முல்லை.

செல்வமுடையனாயிற் பலரொடுங்கூட வுண்ணும்படி யுண்ணவும் வல்லன்; கடமுடையாரின் முந்துறவுள்ள பொருளை யிரப்போர்க்குக் கொடுப்பன்; அறிவில்லாதோர்க்கு மருளானிதல் விசேடத்தும் உடையனாதலன்றி வல்லாதோர்க்கு மகிழுந்துணையாகிய நெடுமானஞ்சி யவன் மனையிடத்திறப்பின்கட் செருகிவைக்கப்பட்ட தீக்கடை கோல் போல் பகையில்லாதவழித் தனதுமறம் தோன்றாமலிருக்கவும் வல்லன்; பகைவர்தன்னைச் சினப்படுத்தவழி தான்றோன்றுங் காலத் தந்தத் தீக்கடைந்தெழுப்பக் கடைகோலினின்றும் உமிழப்பட்டுப் பின் முழங்கும் பேரழல்போலத் தோன்றவும் வல்லனென்றவாறு. உண்ணவும்வல்ல னிரப்போர்க்கீயும் என நின்ற வும்மைகள் சிறப்பும்மைகள். அவ்வாறு பிறருண்ணவுங் கொடுக்கவுமாட்டாமையின் அவை வல்லனென்றார். மற்று அசை. நெடுமானஞ்சி யுண்ணவும் வல்லன் தோன்றாதிருக்கவும் வல்லன் தோன்றுங்கால் தோன்றவும் வல்லன் எனக் கூட்டுக.

ஒரு புறப்பாட்டுக்கு உரை

"வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்
தன்னோ ரன்ன இளையர் இருப்பப்
பலர்மீது நீட்டிய மண்டையென் சிறுவனைக்
கால்கழி கட்டிலிற் கிடப்பித்
தூவெள் ளறுவை போர்ப்பித் திலதே."

—ஔவையார்.

புறநானூற்றைப் பதிப்பித்த எங்களாசிரியப் பெருந்தகை திரு. ஐயரவர்கள் திணை - கரந்தை; துறை - வேத்தியல் எனக் குறித்துள்ளார்கள். அவர்களை அடியொற்றி ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் உரையும் கூறுகின்றது. இவ்விதழில் வேறு ஒருபக்கத்தில் வெளியாகும் புறத்துரை இப்பாட்டின் திணை - தும்பை; துறை - வேத்தியல் என்று கூறுகிறது. புறத்திணை உரையில் நச்சினார்க்கினியர் வஞ்சித் திணையின் பகுதியாகிய 'பிண்டம்மேய பெருஞ்சோற்று நிலை'யில் "துறை யெனவே கள்ளும் பாகும் முதலியனவும் அப்பாற்பாடும்" என்று உரைகூறி இப்பாட்டினை எடுத்துக் காட்டுவர். மண்டை போர்ப்பித்திலது எனக் கள்ளே எழுவா யாக இருத்தலின் உணவாகிய பெருஞ்சோற்று நிலையாக நச்சி னார்க்கினியர் கருதினர்போலும்.

ஐயரவர்கள் பதிப்பில் வேத்தியல் என்றிருப்பது 'வெள் ளாட்டுக் கிடாயைப்போலத் தன்னையொத்த பல வீரர்கள் இருந்தும் அவர்களிடமெல்லாம் அரசன் மண்டையைநீட்டியும் இவனைத்தான் அம்மண்டை பாடையில் ஏற்றவில்லை' எனப் பொருள்படுதலின் இதனை இதனால் இவன் முடிக்கும் என்றுய்ந்த அரசனது இயலைக் கூறுதலின் வேத்தியலாயிற்று என்று கருதக்கூடும். அங்ஙனமே ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்கள் உரைப்போக்கும் செல்கின்றது. புறத்துரை 'வெள்ளாட்டின் கழுத்தில் கட்டப்பட்ட வெட்சிமாலை ஆடு உயிர்விடுவதற்கேதுவானாற்போல மண்டை மகனைப் பாடை யிற் கிடத்தவில்லை; சிறைப்பட்டான்' என்கின்றது. ஆட்டின் கழுத்தில் மாலையிட்டால் ஆடு இறப்பது துணிவாதல்போல

என்ற உவமை மண்டை அவன் இறவாமைக்குக் காரணமாயிற்றெனின் உடன்பாட்டு உவமம் எதிர்மறைப் பொருளுக்கு இயையுமாறு யாங்ஙனம்? சிறைப்பட்டான் என்பது இறத்தலைக் காட்டிலும் வீரத்துக்கு இழுக்காதல் தெளிவு. ஆதலால் இவ்வுரை ஆய்வுக்குரியது. அன்றி வேத்தியலாகாமையும் தெளிவு.

வேத்தியற்கு இலக்கணம் கூறிய ஐயரவர்களும் 'வேத்தியல் எனினும் வேத்தியல்மலிபு எனினும் ஒக்கும்; வேத்தியலாவது வீரர் அரசர் மேம்பாட்டினைக் கூறுவது' என்று கூறி, "தோள்வலிய வயவேந்தனை வாள்வலி மறவர் சிறப்புரைத்தன்று" என்ற புறப்பொருள் வெண்பாமாலைக் கொளுவை மேற்கோள் காட்டுவர். இப்பாடல் வீரன் கூற்றாக இல்லாமல் தாயின்கூற்றாக இருப்பதால் வேத்தியலாகுமோ என்பது ஊன்றி ஆராய்தற்குரியது, நச்சினார்க்கினியர் மண்டை ஒன்றையேபற்றிப் பெருஞ்சோற்றுநிலையுள் அடக்குவதும் அங்ஙனமே ஆய்தற்குரியது.

இச்செய்யுள் தாயின்கூற்று. வென்ற மகனை மண்டை போர்ப்பித்திலது எனப் பாராட்டுகிறாள் தாய். இதனால் இது திணையும் துறையும் வேறாக இருத்தல் அமையும். பொருளதிகாரக் குறிப்பில் சி. கணேச அய்யர் அவர்கள், 'மண்டை போர்ப்பித்திலது என்றது, இவனை இயல்பால் இறவாதபடி பொருது இறக்கச்செய்தது' என்று உரைகண்டார். இவ்வுரை ஏறாண்முல்லை ஆதற்கு ஏற்புடைத்தாதல் அறிக.

இவ்வுரையின் வேறுபாடுகளை ஓர்ந்து சிறந்தனகோடல் தெள்ளியோர் கடனாம்.

—ஆசிரியர்.

கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிரமஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(நந்தன ஸூ ஐப்பசிமீ 1உ முதல் 30உ வரையில்)
(17—10—52 முதல் 15—11—52 வரையில்)

1. மேஷம். அசுவதி, பரணி, கார்த்திகை $\frac{1}{4}$.

அசுவதி கிருத்திகை சம்பந்தப்பட்ட மேஷராசிபலன் சுபமாகும். நல்வரவு, பெரியோர் மேலோர் அருள்கிட்டுதல், தொழில் ஏற்றம், நஷ்டதனவரத்து, காரிய விருத்தியாகுதல், மனோல்லாசம், இல்லறசந்தோஷம் இவைகள் ஏற்படும். பரணி சம்பந்தப்பட்ட மேஷராசிபலன் மகாதுன்பங்கள் உண்டாகும். பரணி நக்ஷத்திர ஏழைகளும், வேலைஅகப்படாமல் பலகஷ்டங்களையே அடைவார்கள். சதா தெய்வசிந்தனை செய்து கொண்டிருக்க வேண்டும். புதனும் சனியும் சுபவாரமாகும்.

2. விருஷபம் கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி, மிருகசீரிஷம் $\frac{1}{2}$.

விருஷபராசிபலனும் மேஷத்தையே அனுசரிக்கும். சுபதிசையுடைய வியாபாரிகளும் உத்யோகஸ்தர்களும் நன்மையடைவார்கள். நடுத்தர வகுப்பார்களும், பூமிக்குள்ளோரும், பெரிய உத்தியோகஸ்தர்களும், பெரியவியாபாரிகளும் பாதிக்கப்படுவார்கள். கீழ்த்தரராய விவசாயிகள் எல்லோரும் ராஜாங்கபலமுள்ளதாகக் கருதி அகம்பாவத்தால் கெட்டுக் கடவுளால் அழிக்கப்படுவார்கள். ரொம்ப நிதானமுள்ள விவசாயிகள் கடவுள்பலத்தால் நன்மையை அடையலாம். வெள்ளியும் சனியும் சுபவாரமாகும்.

3 மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை, புனர்பூசம் $\frac{3}{4}$.

மிதுனராசிபலன் திருவாதிரைக்குமாத்திரம் சிரமத்தோடு நன்மைகாட்டும். மற்ற இரண்டு நக்ஷத்திரபலனும் மிசிரமாகும். அதிகச்செலவுகளும் விவசாயநஷ்டமும், வியவஹாரஉற்பத்தியும் ஈதிபாதைகளும், அபாயமும், கீர்த்திபங்கமும், வேலையாள் கலகமும் சத்துரு பயமும் காட்டும். கடவுளை உள்ளன்புடன் வணங்க ஒருவாறு சுபமுண்டாகும். சனிக்கிழமை நலன்காட்டும்.

4. **கடகம்.** புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம், ஆயில்யம்.

ஆயில்ய நக்ஷத்திர சம்பந்தபலன் கொஞ்சம் சுகத்தைத்தரும். காரியசித்தி, ரிணநிவர்த்தி, சகத்துருநாசம், விவகாரஜயம், வேலையாள்சேர்க்கை, தெய்வபலம்சேர்க்கை முதலிய சுபங்கள் ஏற்படும். மற்ற இருநக்ஷத்திரபலமும். அசுபத்தைத்தரும். மனம் நிம்மதியடையாது. செவ்வாயும் வியாழனும் நலனடையும்.

5. **சிம்மம்.** மகம், பூரம், உத்திரம் $\frac{1}{4}$

பூரம் சம்பந்தப்பட்ட சிம்மராசி பலன் ரொம்ப கெடுதலாகும். தொழில் நஷ்டம், எங்கும் அபஜயம், அதிகச்செலவு, குடும்ப கலகம், பெரியோர்சாபம் சேருதல், ஸத்கர்மஹாநி முதலிய கஷ்டபலன்கள் கிட்டும். மகமும் உத்திரமும் சிம்மராசி சம்பந்தபலன் சுபமாகும். ஆரோக்கியம், நஷ்டதனபிராப்தி, நூதன வியாபாரச்சேர்க்கை, தூரயாத்திரை, பந்துமித்திரசமாகமம், சந்தோஷம் இவைகள் உண்டாகும். வெள்ளியும் செவ்வாயும் சுபவாரமாகும்.

6 **கன்னி.** உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் சித்திரை $\frac{1}{2}$.

ஹஸ்த நக்ஷத்திரம் ஸம்பந்தப்பட்ட கன்னியாராசிபலன் பல கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டே தெய்வபலத்தால் தாண்டிக்கொண்டு வருவார்கள். வியாபாரிகளாகில் நஷ்டமடைவார்கள். நம்பினவர் மோசம்செய்வார். பிரபுக்கள் மிகுந்தவேதனைகளையடைவார்கள். சரீராரோக்கியம் குறையும். கவலை அதிகமாகும். உத்திரமும் சித்திரையும் மிசிரபலனைத் தரும். ஏழைகளுக்கும் நடுத்தரவகுப்பாருக்கும் குடும்பம்நடத்த முடியாமல் வறுமை அதிகமாகும், வியாபார சம்பந்தமுள்ள கீழ்த்தரவகுப்பார்கள் கொஞ்சம் நலனடைவார்கள். பிறர் உபகாரம் கிட்டும். புதனும் வியாழனும் சுபவாரமாகும். விவசாயிகள் ஈதிபாதைகளால் சிரமப்படுவார்கள்.

7. **துலாம்.** சித்திரை $\frac{1}{2}$, சுவாதி, விசாகம் $\frac{3}{4}$.

துலாம் சம்பந்தப்பட்ட மூன்று நக்ஷத்திரக்காரர்களுமே சிரமப்படுவார்கள். அதிகச்செலவும், ரிணபாதையும், தொழில் மந்தமும், குடும்பத்தொல்லையும், வீண் அலைச்சலும் ஏற்படும் இம் மாதம் 15உக்கு மேல் சிலஎதிர்பாராத நன்மைகள் கிட்டும்.

சுவாதி சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெய்வானுகூலமாய் வெகு நாளாக எதிர்பார்த்து நடவாதகாரியம் கைகூடும். சந்தோஷம் உண்டாகும். புதன் சனி வாரங்கள் சுபவாரமாகும்.

8 **விருச்சிகம். விசாகம், ¼ அனுஷம், கேட்டை.**

விசாகம் சம்பந்தப்பட்ட விருச்சிகபலன் கெடுதலை உண்டு பண்ணும். மற்ற இரண்டுநக்ஷத்திரபலனும் சுபமாகும். காலி கன்று சேர்க்கை, நஷ்டதன பிராப்தி, வாஹன சேர்க்கை, விவகார ஜயம், நூதனத்தொழில் விருத்தி, நல்லோர் பெரியோர் ஆசி, கீர்த்தி, தெய்வ பலம் எல்லாம் ஒருங்கே சேர்ந்து நன்மையைத்தரும். புதனும் சனியும் சுபவாரமாகும்.

9 **தனுசு. மூலம், பூராடம், உத்திராடம் ¼.**

தனுராசிப்பலன் மூன்று நக்ஷத்திரக்காரர்களுக்கும் அதிகச் செலவின்பேரில்சந்தோஷத்தைத்தரும். தொழில் மாற்றமுண்டாகும். அடிக்கடி பிரயாணம்ஏற்படும். சன்மானங்களும் கீர்த்தி பத்திரமும் வித்வான்களுக்குக் கிடைக்கும், தெய்வபலம் தோன்றும், மனம் சாந்தியடையும். சனிக்கிழமையும் ஞாயிற்றுக் கிழமையும் சுபவாரமாகும்.

10. **மகரம். உத்திராடம் ¾, திருவோணம், அவிட்டம் ½.**

உத்திராடம் திருவோணம் சம்பந்தப்பட்ட மகரராசிபலன் விசேஷ நன்மைதரும் சொத்துலாபம், விவகாரஜயம், கடன் நிவர்த்தி, நூதன ஆபரணச்சேர்க்கை, பந்துமித்ராளுடைய சேர்க்கை, தூரதேசத்திலிருந்து அழைப்பு, உல்லாசம் இவைகள் நடைபெறும். அவிட்ட நக்ஷத்திரபலன் சரீரப்பிரயாசையோடு நன்மைதரும், தொழில் விருத்தியாகும், வெள்ளிக்கிழமை நலன் காட்டும்.

11. **கும்பம். அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾.**

இக் கும்பராசிபலனை எழுதத் தேவையே இல்லை. முன் மாதத்தைவிட அதிக துன்பமாகும். பலகஷ்டங்களுடன் வியாதியால் துன்பமும் பணநெருக்கடியும் கடன் தொல்லையும் எதிலும்

நஷ்டமும்கஷ்டமுமேஉண்டாம் அலக்ஷியமாய் இருக்கக்கூடாது. தெய்வபலத்தையே நாடவேணும். சனிவாரம் மிக்ககஷ்டத்தைத் தரும். புதன்கிழமை சுமாராக இருக்கும்.

12. **மீனம்.** பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி, ரேவதி.

உத்திரட்டாதி நக்ஷத்திரக்காரர்கள்மேன்மையடைவார்கள் கீர்த்திபத்திரமும் தொழில் மேன்மையும் லாபகரமும் ஜயமும் ஸந்தோஷமும் அடைவார்கள். ரேவதிகாரர்கள் பிரயாஸையின் பேரில் நலனடைவார்கள். தொழிலில் ஏற்றமும் லாபமும். நஷ்ட தனப் பிராப்தியும், கடன் நிவர்த்தியும், பெரியோர் நேசமும் தெவபலமும் கிட்டும். பூரட்டாதிக்கு மாதத்தின்முன் 15 தினங்கள் கஷ்டத்தையும். பிற்பாதி சுகலாபத்தையும் தரும். சனியும், புதனும் சுபவாரமாகும்.

சென்ற புரட்டாசிமாதம் முதலே பிரபஞ்ச ஜாதகப்படி கிரஹங்களின் அமைப்பு ஸரியில்லே. சுப கோசார பலன் குறைந்தும், அசுப கோசாரபலன் அதிகமாயும் காட்டும். ஆஸ்தீக ஜனங்களும் தர்மாதிகாரிகளும் உலகக்ஷேமத்துக்குப் பாடுபட்டுத் தேவகோபத்தைத் தணியச் செய்யவேண்டும். கடவுள் காப்பார்.

குறிப்பு:— தற்காலம் உலகில் உணவுப் பிரச்சினே மிகவும் பாதிக்கப் பட்டிருப்பதாலும், காலாகாலத்தில் மழையின்மையாலும், சாகுபடிக்கு ஜலத்தட்டு ஏற்படுகிறதை நிவர்த்திக்க ராஜாங்க மூலமாய் உபகரித்துவரும் குழாய்க்கிணறுகளுக்கு ஜலஸப்ளே செய்யத்தகுந்த ஜலநாடிகளைக் கண்டுபிடித்துச் சொல்ல ஷ்டி ஜோஸ்யர் அவர்களைக்கலந்து ஆலோசித்தால் பயன் கிட்டும். சிரமமன்னியில் பெருமளவில் ஜலஸப்ளே ஸ்தானத்தை அறிந்துகொள்ளலாம்.

अष्टाविंश...तत्व वादवेदान्तपक्षकम् ।
अनादिकाले क्रियात्मनं कुटली कुण्डलिनां स्थितम् ॥
बिन्दुशक्तिविभेदांशे बैन्दवं भावमाचरेत् ।
तत्काले मलसम्बन्धं तत्सृष्ट्यादि ततोदितम् ॥

என வந்தது, முப்பத்தாறு தத்துவமெனக்கூறும் வேதாந்த பக்கமென்க. சைதன்னியஞ் சத்தி பரிணுமமாயினுஞ் சொரூபத்தை அடைதலே முடிவாகலின் மாயா வாதத்தில் பிர்ம்ம உபாதானவாதம் போலவும் சித்தாந்தத்தி னிமித்த காரண பரிணும வாதம் போலவும்........................சிவ சைதன்னிய பரிணுமம் ஈசுவரனென்க. இவ்வாறு தூலப் பிரணவ தேவதை போலே மகாசத்தங் கூட்டிச் சூக்குமப் பிரணவ அவத்தா தேவதைகளைக் கூறலாமென்பதற்கு மற்றப் பிரணவா ... ...
அந்தப் பிரணவப்பெயர் பெறுவர் என்பதும்,

முன்சொன்ன வொன்பானின் முன்னுறு தத்துவந்
தன்சொல்லி லெண்ணத் தகுமொன்பான் வேறுள
பின்சொல்ல லாகிய வீரொன்பான் பெயர்த்திட்டுத்
தன்செய்தி யாண்டவன் ருன்சிறந் தானே. (2540)

என்னும் திருமந்திரத்தான் உணர்க. ஈண்டு முன்னர்ப் பிரணவபேத மிரண்டிற்கும் பதினெட்டுப் போக, நின்ற மூவகைப் பிரணவ பேதத்திற்குமபிமானிகளைத் **தன் செய்தி யாண்டவுன்ருன் சிறந்தானே** என்றது. பிறவும் விரித் துணர்க. 30

31. * * *

இத்திறத்தினென்பது முற்கூறிய பஞ்சப்பிரணவா வத்தை யனைத்தும் பத்து முத்திபேதமாயடங்கும் என் கின்றது. அவையாமாறு சீவ துரியமென்னும் சீவன்முத்தி யும், பர துரியமென்னும் பரமுத்தியும், சிவ துரியமென்னும் சிவமுத்தியும், நீலோற்பல வாக்கியசித்தி என்னுஞ் சொரூப

முத்தியுமாக நான்கு முத்தியுந் தூலப் பிரணவமான மகா வாக்கிய பிரணவாவஸ்தா பேதமாய் அடங்கும். **இவற்றின் மேலா மூவகையா முத்தி** என்பது சூக்குமப் பிரணவா வத்தா பேதமாம். அவை முற்கூறிய வாக்கியப் பிரணவத் தின் முடிவினீலோற்பலவாக்கிய சித்தியான சொரூபமுத்தி காரணமாக அதனையடியாய்க்கொண்டு நிகழ மூவகைத் துரியமாம். இந்தச் சொரூப முத்திக்குச் சுவசொரூப முத்தி என்றும் பெயர். அதனால் அஃதடியாய்ப் பிறந்த மூன்றிற் கும் சுவசொரூபசூக்குமம், சுவசொரூப அதிசூக்குமம், சுவ சொரூப மகாசூக்குமம் என்னும் பெயராம். இந்த மூவகைத் துரியமும் நிகழுமிடம் சூக்குமப் பிரணவமாம். அதுவே தாரப் பிரணவமென்றுமாம். ஆகவே மூவகை முத்திகளும் சூக்குமப் பிரணவாவத்தாபேதமாய் அடங்கும். இனி மருவு முத்கிராந்த முத்தியாவது, அதிசூக்குமப் பிரணவமுத்தி; அஃதாவது சூக்குமப் பிரணவ பேதமான மகா சூக்கும முத்தியடியாகப் பிறந்த மோனமுத்தியாம். இதற்கு மோனப் பிரணவமென்றும் சாம்பவி துரியம் கெசதுரியம் ஞானதுரியம் என்றும் பெயர். துரியமெனினும் முத்தியெனினுமொக்கும். நடனமுத்தியாவது மகாசூக்குமப் பிரணவதுரியம். மெய்த்த சுகாநந்த முத்தியாவது ஆனந்தப் பிரணவ துரியம் இவ்வாறு வரும் பஞ்சப் பிரணவாவத்தைகளெல்லாம் ஒருபிரணவமாய் முடிந்த துரியம். மற்றும் மேல்வரும் பிரணவத்திற் கடியா யிருக்குஞ் சீவ துரியம் பர சாக்கிரத்திற் கடியாயும், பர துரியஞ் சிவசாக்கிரத்திற் கடியாயும் மேன்மேற்............ இவ்வாறு பத்து முத்தியாமென்பது;

சீவன்முத்தி பரமுத்தி சிவமுத்தி சொரூபமுத்திகளாகின்ற
மூவ... கையாமுத்தி முத் கிராந்தமுத்தி நடனமுத்தி
முழுதுங் காட்டிட்டு
ஓவிலா நந்தமுத்தி யுரைத்திடவென் போலுருக்கொண்
டுலகில்வந்த
தேவனையா வடுதுறையிற் சதாசிவதே சிகன்பாதம்
சிந்தைசெய்வாம்.

என வரும் குருத்துதியால் அறிக. இனி **யத்தனையு முக் கலையாவற்றின்** மேலுமாம் ... ... யாம்

ஆணவத்தின் பேதமென்பரென்றது பிராசாதகலா பேதங் கூறும் வழி,

अकारश्च उकारश्च मकारो बिन्दुरेव च ।
अर्धचन्द्रनिरोधी च नादो नादान्त एव च ।
शक्तिश्च व्यापिनी चैव व्योमरूपा तथैव च ।
आनन्ता च तथानाथा नाश्रिता समना तथा ॥
उन्मना च तदन्तश्च पराशक्तिः परान्तकम् ।
परशिवस्तदन्तश्च शाम्भवं गुरुपादुका ॥
शिवः शाम्भव इति ज्ञेयो द्वाविंशद्भेद उच्यते ।

என ஞானசித்தியில் அந்தப் பிரணவபேதமான கலாரூபங்களை விரித்து முடிவிற் குருபாதுகை தோன்றக் கூறுதலின் தெசாவத்தை என்னும் பத்தும் பன்னிரண்டானுலும் பத்தானுற் போலப் பத்துத் துரியமும் பன்னிரண்டு துரியமானுலும் பத்தாய்த் துரியந்தோன்றுஞ் சாக்கிரஞ் சொற்பனஞ் சுழுத்தியுண்டாய் முப்பது துரியமு முப்பதவத்தையாய் விரியுமென்பாருமுளர். 31

32. * * *

பிரணவந்தான் தூல சூக்குமத்திஞேடு என்பது முன்னதிகாரப்பட்ட பிரணவபேதமைந்தும் இவை என்பதுந் தூலப் பிரணவத்தின் முற்கூறிய பத்துமுத்தியி ஞன்குமுத்தியடங்குமென்பதுங் கூறுகின்றது. 32

33. * * *

இந்த மகா வாக்கியத்துரியமென்பது சூக்கும ஓங்காரம் பத்து மூவகை முத்தியுமாமாறு கூறுகின்றது. இந்த சுவசொரூப முத்தியாகிற சூக்கும வோங்காரத்தின் பேதத்திற்குத் தூலப்பிரணவ முடிவினிகழுந் துரியமான சொரூப

முத்தி யடியாகலின் ஞலென்றுரெனினும் சூக்குமப் பிரணவ பேத முத்தி மூன்றென்றே கொள்க. 33

34. * * *

இதன் முடிவில் என்பது சூக்குமப் பிரணவ முடிவினுந் தூலப் பிரணவ முடிவிற்போல நீலோற்பல வாக்கியசித்தி வருமெனவும் 'மோனமுத்தி யென்றும் முத்கிராந்த முத்தி என்றும் மோனப் பிரணவமென்றும் அதிசூக்குமப் பிரணவம் வழங்கப்படும் என்றும், நடனமுத்தி என்ற பெயர் மகா சூக்குமப் பிரணவத்திற்கென்றும், ஆனந்தப் பிரணவமஞ்சாவது பிரணவம் என்றும் மற்ற மூன்று பிரணவங்களுமாவன விவை யெனவுங் கூறுகின்றது ... ... வரும் பஞ்சப்பிரணவத்தினனு ... ... விளங்கும். 34

35. * * *

இனைய பல வவத்தைகளுஞ் சுத்தாவத்தை என்பது இந்தப் பஞ்சப் பிரணவபேத மெல்லாஞ் சுத்தாவத்தை யென்றும், மேலவத்தாதீதமான குரு சுவரூப பிராப்தியே முத்தியென்றும் மற்ற அவத்தைகளெல்லாம் பெத்தாவத்தை என்றும் கூறுகின்றது. ஈண்டு அவத்தாதீதமே சீவன் முத்தி என்றதற்கு வருமாறு. ஞானசித்தியில்,

सर्वावस्था विनिर्मुक्तं गुरुरूपं परात्परम् ।
गुह्यं च शाम्भवं द्वेधा गुह्याद्गुह्यं परात्परम् ॥

என வரும். இனிப் பெத்தாவத்தை நூற்றெட்டென்பதற்கு வருமாறு. அதிலேயே,

अवस्था परमिदं प्रोक्तं शृणु देवि वरानने ।
अवस्थामष्टोत्तरशतं शुद्धावस्था दशाधिका ॥
केवलः सकलः शुद्धः अवस्था त्रिविधा मता ।

चतुर्थका च तुर्या च जाग्रातीतं च स्वप्नका ॥
तुर्यजाग्रमतीतं च जाग्रतुर्यः सुयोनकम् ।
अवस्थामष्टोत्तरशतं शुद्धावस्था दशाधिकाम् ॥

இது முதலான அவத்தைவிவேகத்திற் கண்டுகொள்க. இனி **வினைவகையாற் புருவநடு முதலாதார மேவுவதும் பிறிதும்** என்பது,

நெற்றி நடுவு நினைவெழுங் கண்டமு
முற்ற விதையமு மோதிய நாபிக்கீழ்ப்
பெற்ற துரியமும் பேசிய மூலத்தே
யுற்ற வதீத மொடுங்கு மிடனே. (திருமந் - 3064.

எனவும் பிறவும் வருமாற்றான் உணர்க. பெத்தாவத்தையிற் சுழன்று பிறப்பிறப்படையாமல் சுத்தாவத்தையடைதற்குரிய சாதன நான்குடையரெனக் கூறுஞ் சாதன சதுட்டயமாவது மாயாவாதிகள் கூறுமவை மாயாவாதப் பிரகரணத்தில் வருமாறு. नित्यानित्यवस्तुविवेकः इहामुत्रफलभोगविरागः शमादिषट्कसंपत्तिः मुमुक्षुत्वं च । என்பன இவற்றுள் நித்தியாநித்திய வத்து விவேகமாவது ब्रह्मैव नित्यं वस्तुतोऽन्यदखिलमनित्यमिति विवेचनम् । இனி இகாமுத்திர பல போக விராகமாவது ऐहिकानां स्रक्चन्दनवधूवस्त्रादिभोगानामनित्यकर्मजन्यतया अनित्यत्वादामुष्मिकानामप्या भूतादि भोगिनामनित्यकर्म जन्यतयाऽनित्यत्वात्तेभ्यो नितरां विरतिः । சமாதி ஷட்க சம்பத்தியாவது शमदमोपरतितितिक्षासमाधानश्रद्धाख्याः । शमस्तावच्छ्रवणादिव्यतिरिक्त विषयेभ्यो मनसो निग्रहः । दमो बाह्येन्द्रियाणां तद्व्यतिरिक्त विषयेभ्यो निवर्तनम् । निवर्तितानां तेषां तद्व्यतिरिक्तविषयेभ्यो नितरामुपरमणमुपरतिः अथवा विहितानां कर्मणां विधिना परित्यागः । शीतोष्णादिद्वन्द्वसहिष्णुता तितिक्षा । निगृहीतस्य मनसः श्रवणादौ तदनुगुण विषये च समाधिः समाधानम् । गुरौ वेदान्तवाक्ये च परदेवतेति विश्वासः श्रद्धा । मुमुक्षुत्वं मोक्षेच्छा कदानु मुक्तिर्भविष्यति इति दाहः । எனவரும். இவவாறு பரிபூரண சித்தியிலும் நித்தியா நித்திய

வத்துவினை நிறுமித்திக பரலோகத்திற், சுத்தாத்த..........
தபாபோகந்து....வேதாந்தத்தின்.......தானவ்வயுமறவடக்கிக்
குடும்பச் சுவை விட்டு(நீ)ங்கிவேறுஞ் சித்தாய் நின்ற சிவன்
மக்கெ......னைவார் சிட்டர்களே எனவும் பிறவும் வரும்.
இனிக் **“குருவருளால் சாதிப்பர்”** என்பது சாம்பவ
தீக்கையால் என்க. அது வருமாறு திருமந்திரத்தில்,

உடல் பொருளாவி யுதகத்தார் கொண்டு
படர்வினைப் பற்றறப் பார்த்துக் கைவைத்து
நொடியினடி வைத்து நுண்ணுணர் வாக்கிக்
கடிய பிறப்பறக் காட்டின னந்தியே. 1778

கூடு முடல் பொருளாவி குறிக்கொண்டு
நாடி யடிவைத் தருண்ஞான சத்தியாற்
பாடி லுடலினிற்பற்றற நீக்கியே
கூடிய தானவ னுங்குறிக் கொண்டே. 1783

இசைந்திடு மன்பி லெழுந்த படியிற்
பசைந்திடு மீசனுர் பாசத்து ளேகச்
சிவந்த குருபரன் சென்னியிற் கைவைத்
துவந்த குருபதம் முள்ளத் துவந்ததே. 1590

நாற்குலந் தன்னிற் றலைக்குல நன்னூலின்
பாற்குல ரென்னும் பான்மை யின்னுறை
மேற்குலம் வேதாந்தம் போதிக்க வேண்டும்
ஞானவனலிற சிதை—மே.

எனவரும், இவ்வாறு ஞானசித்தியிலும்

**शरीरमर्थं प्राणांश्च सद्गुरुभ्यो निवेदयेत् ।
दीर्घदण्डनमस्कारं नित्यं स्याद्गुरुसन्निधौ ॥
पश्चात्तिष्ठेच्च तत्प्रोक्तं शिवहस्तस्थिरं भवेत् ।
करुणा दर्शिनी भावात्पुण्यपापद्वयं हरम् ॥
श्रीपदं शिरसाऽऽराध्यं सोऽहमस्मीति भावयेत् ।
जीवन्मुक्तिः परामुक्तिस्तत्र संभावना द्वयम् ॥**

शिवोऽहमस्मीति सञ्चित्य शिवज्ञानं प्रकाशितम् ।
शिवज्ञानं महाज्ञानं सोऽहमस्मीति भावितम् ॥

என வரும். கேள்வி முதல் நான்கு மேல் விளங்கும். 35

36. மறைமுடிவின் வாக்கியந்தான் நான்கவற்றுள் தத்வ
மசிவாக்கியம் மொன்றே வயங்குறப் புடைத்தாகும்
குறையு மாயாவாதி கொண்ட தோடுங்
கூடவே சித்தாந்த நிலையுங் கூறி
நிறைய வருமரபுடைத்தாய் பதபதார்த்தம்
நிகழ்முக்ய விலக்கியங்கள் சுத்தாசுத்தம்
முறையினவாந்திர வாக்கி ......யலுமிலக்கணையும்
மொழிகுருவின் வாய்க்கேட்டல்......

மறைமுடிவின் வாக்கியந்தானென்பது முற்கூறிய நான்கனுட் கேள்வியாமாறு கூறுகின்றது. ஈண்டுக் கூறிய வேதாந்த வாக்கியம் நான்காவன மகாவாக்கியங்களாம். அவை முதல் வாக்கியம் இருக்குவேதத்தில் "**प्रज्ञानं ब्रह्म**" என்பது. இந்நான்கையும் மகாவாக்கியமென்றது **ब्रह्मैवेदं सर्वम् । इदं सर्वं यदयमात्मा । एष त आत्मा अन्तर्याम्यमृतः । स चायं पुरुषे यश्चासावादित्ये स एकः । प्रज्ञा प्रतिष्ठा प्रज्ञानं ब्रह्म । सत्यं ज्ञानमान्तं ब्रह्म । अन्नं ब्रह्म ॥** இவை முதலான வாக்கியங்கள். அவாந்தர வாக்கியங்களாகலின், இவ்வாறு நான்கு வேதங்களினும் கூறும் வேதாந்தமான உபநிடதம் முப்பத்திரண்டும் பிரபல சுருதிகளாம். அவ்வாறு நாலுவேதங்களினும் கூறும் கன்ம காண்டம் அல்ப சுருதிகளாகலின். இங்ஙனம் கூறும் நால் வேதங்களினும் கர்மகாண்ட வாக்கியங்களினு மேலான ஞான காண்ட வாக்கியங்கள் என்னும் வேதாந்த வாக்கியங்களுள்ளும் அவாந்தர வாக்கியங்களினு முக்கியமான மகா வாக்கிய நாலினும் **தத்துவமசி வாக்கிய மொன்றே வயங்குசிறப்புடைத்தாகும்** என்றது அந்த நான்கு வாக்கியப் பொருளும் இந்த வாக்கியத்திலிருக்கையாலும் தற்பதமுந்தி வருகையினுலும் அன்வயமாகப் பொருளுரைக்குங்கால் ஆன்மாக்க

போர்டு ஹைஸ்கூல் ஆசிரியர், திரு. முருகையா பிள்ளை அவர்கள் B. A., L. T., மாயூரம் அட்வகேட் திரு, குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் B.A., B.L., மாயூர வட்டம் டிப்டி இன்ஸ்பெக்டர், பிர்மஸ்ரீ L. இராமச்சந்திர ஐயர் அவர்கள் B.A., L.T. மாயூரம் முனிசிபல் சேர்மன் பிர்மஸ்ரீ M. S. பொன்னுசாமி ஐயர் அவர்கள் B. Sc. மாயூரம் முனிசிபல் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் பிர்மஸ்ரீ சேஷகிரி அய்யர் அவர்கள் B.A., L.T. மாயூசம் நாஷனல் ஹைஸ்கூல் தலைமையாசிரியர் பிர்மஸ்ரீ நடராஜ ஐயர் அவர்கள் M.A., L.T., ரிடையர்டு D. S. P. பிர்மஸ்ரீ இராமச்சந்திர ஐயர் ஆகியோர் தலைமைதாங்கி மாணவர்களுக்கு அறிவுரை வழங்கிச் சிறப்பித்தார்கள். ஒவ்வொருநாளும் பலவிதமான நடனங்கள், கும்மி, கோலாட்டம், விநோதக்கூத்து முதலியனவும் மாணவர்களாலும் மாணவிகளாலும் நிகழ்த்தப்பெற்றன. ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர் வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் தொடக்கநாளன்று விழாவின் தத்துவார்த்தங்களை எடுத்து விளக்கினார்கள். ஷ பாடசாலைத் தலைமை ஆசிரியர் பிர்மஸ்ரீ வெங்கட்டராமய்யர் அவர்கள் நாடோறும் வரவேற்புரை நன்றியுரை கூறினார்கள். வழக்கம்போல் ஆதீன மடாலயத்திலும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருமுன்பு தேவிமான்மிய பாராயணமும் சிறப்பாக நடைபெற்றது.

மாயூரத்தில் கந்தசஷ்டி விழா.

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான மாயூரம் குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் 19—10—52 முதல் ஆறுநாட்களும் கந்தசஷ்டிவிழா மிகச் சிறப்பாக நடைபெறும். இவ்விழாவை முன்னிட்டு ஷ கோயில் ஸ்ரீ குமாரவிலாச மண்டபத்தில் மகாநாடும்நிகழும். பல்கலைச்செல்வர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் M. A., B. L., M. O, L.. தருமபுர ஆதீனப் புலவர்கள் வித்துவான் திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள், விரிவுரை யரசு பாலகவி திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள். காஞ்சிபுரம் திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள். B. A. L. T. தஞ்சை திரு பாஸ்கரத்தொண்டைமான் அவர்கள், திருச்சி திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், அண்ணாமலைநகர் வித்துவான். திரு. ஜி. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் M. A B. L. உள்ளிட்ட பல அறிஞர்பெருமக்களும் ,ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களும், ஆதீனக் கல்விநிலைய ஆசிரியர்கள் மாணவர்களும், மாநாட்டில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்கள்.

Printed & Publised by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhin[illegible] at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9—10—1952.